குழந்தைகள் பத்திரிகை
14-3-1976
60 காசு

கோகுலம்



பிரசித்தி பெற்ற மக்களுக்கு
பிரபலமான பேனாக்கள்



கேம்லின் 45
& கேம்லின் ஜாட்டர்

கேம்லின் பேனாக்களும் பால் பேனாக்களும் எண்ணிலா
டிசைன்களிலும் வண்ணங்களிலும் கிடைக்கின்றன.

Vision 765 Tam

கோகுலம்

மலர் 4 ❊ இதழ் 25

மார்ச் 14, 1976

ராட்சஸ, பங்குனி, 1

சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம் ரூ. 15.00
ஆறு மாதம் ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம் ரூ. 40.00
ஆறு மாதம் ரூ. 20.00



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்



ஆசிரியர்: தினமும் ஏதோ கஷ்டமான வேலையைச் செய்வதாகச் சொல்றியே, அதை நீ மட்டும் செய்கிறாயா, கூட யாராவது செய்கிறார்களா?

பையன்: என் அம்மாவும் செய்யறா. என்னை எழுப்பக் கஷ்டப்படறா. நானும் எழுந்திருக்க ரொம்பக் கஷ்டப்படறேன்.



ராஜு: நான் தினமும் டிக்கெட் வாங்காமல் தான் காலேஜுக்கு போறேன்.

ரமா: ஐயையோ, அது சட்டவிரோதமாச்சே!


ராஜு: நடந்து போறது சட்ட விரோதமா?


— வி. சீனிவாசன்.

ராமு: இந்தப் பனியிலே நமக்கெல்லாம் 'கடகட'ன்னு தந்தி அடிக்குதே, என் தாத்தாவுக்கு அப்படி யில்லே, தெரியுமா?

சீனு: அடடே அப்படியா?

ராமு: ஆமாம்! அவருக்குப் பல்லே இடையாது. -எச். என். சுப்ரமணியன்






சிறுவன் 1: டேய் எங்கப்பா தன் ஆசை நிறைவேறாமலேயே ரிடையர் ஆயிட்டார்.

சிறுவன் 2: என்னடா ஆசைப்பட்டார் அப்படி?

சிறுவன் 1: ரோடு இஞ்சின் டிரைவரான அவர் எப்பொழுதும் ஒரு நாள் இரண்டு காரையாவது 'சைடு' வாங்கணும்னு நினைச்சிருந்தாராம்.

- பி. வி. எஸ். ராஜன்



கடைக்காரர் எங்க ரொட்டியிலே, என்ன குறை கண்டே? நீ பொறக்கறத்துக்கு முன்னேயிருந்தே நாங்க ரொட்டித் தயாரிக்கிறோம். தெரிஞ்சுக்கோ!

கிட்டு: அது சரி, அதை ஏன் இப்போ விக்கிறீங்க?

— எம். என்.

ஒருவர் 'நீர்' பனிக் கட்டியாக மாறுவது எப்படி?

மற்றவர்: 'நான்' எப்பொழுதுமே பனிக் கட்டியாக மாறுவது இல்லையே!

— து. சுவாமிநாதன்



சிரிக்கச் சிரிக்க





அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

பக்தி மூன்று வகைப்படும். தெய்வ பக்தி, அடியார் பக்தி, குரு பக்தி. அடியார் பக்தியைக் காட்டிலும் தெய்வ பக்தியைக் காட்டிலும் குரு பக்தியே சாலச் சிறந்தது.

தெய்வத்தினிடம் செய்த பாவம் குருநாதனிடம் தீரும். குருநாதனிடம் செய்த பாவம் தெய்வத்தினிடம் தீராது நம்முடைய கரு மேனியை மாற்ற வந்தது குருவின் திரு மேனி. குரு பக்தியினால் உயர்ந்தவர்கள் பலர்.

ஒரு கானகத்தில் அயோத தௌமியர் என்ற ஒரு தபோதனர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலம் நடத்தினார். பல திறப்பட்ட மாணவர்கள் அக்குருகுலத்தில் கலை பயின்று வந்தார்கள். அம்மாணவர் குழாத்தில் 'ஆருணி' என்ற பாஞ்சால ராஜ குமாரன் முதல் மாணவனாக விளங்கினான்.


ஒரு நாள் குருநாதர் அந்த அரச குமாரனை நோக்கி, ''ஆருணி! நமது குருகுலத்துக்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகி பயிரை அழிக்கின்றது. ஆதலால் நீ போய் மடையை அடைத்து விட்டு வா'' என்று கட்டளையிட்டார். அவனோ அரச குமாரன். பெருஞ் செல்வத்தில் பிறந்து செல்வமாக வளர்ந்தவன். 'வயல் வேலையை அரச குமாரனாகிய நான் செய்வதா?' என்று எண்ணினானில்லை. குருநாதருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

வயலிடம் போய் புல்லுடன் கூடிய களி மண்ணை வெட்டி வெட்டி மடையில் இட்டுத் தண்ணீரைத் தடுக்க முயன்றான். அவன் அடைக்க அடைக்க மடை அடைபடாமல் உடைந்து கொண்டே யிருந்தது. காலை தொடங்கி மாலை வரைக்கும் வேலை செய்தும் மடை அடைபடவில்லை.

ஆருணி உடலும் உள்ளமும் சோர்ந்தான். குருநாதன் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்கு நான் இன்னும் இருக்க வேண்டுமா? என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான். என்ன செய்யலாம் என்று சிறிது நேரம் சிந்தித்தான். குருநாதன் பணியில் இந்த உடம்பையே தியாகம் செய்து விட வேண்டும் என்று எண்ணினான். தண்ணீரை எதிர்த்து மடையில் படுத்து விட்டான்.

அன்றிரவு குருநாதர் விளக்கின் முன் அமர்ந்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். முதல் வரிசையில் அமர்ந்து பயபக்தியுடன் பாடம் கேட்கிற ஆருணியைக் காணாது திகைத்தார்.

''மாணவர்களே! உத்தம குணம் படைத்த ஆருணி எங்கே?'' எனக் கேட்டார். ஒரு மாணவன், ''சுவாமி! அவன் காலையிலே வயலுக்கு மடை அடைக்கச் சென்றான். திரும்ப வரவில்லை'' என்று கூறினான்.



குருநாதர் தீவட்டியை எடுத்துக் கொண்டு மாணவர்கள் புடைசூழ வயலுக்குச் சென்றார். அங்கு எங்கு தேடியும் ஆருணியைக் கண்டாரில்லை. கனிந்த சிந்தையுடன் அன்பொழுக, ''ஆருணி! ஆருணி'' என்று அழைத்தார். ஆருணி தண்ணீரில் இருந்த வண்ணம் ''குருநாதா! அடியேன் தண்ணீருக்குள் படுத்திருக்கிறேன்'' என்றான்.

அயோத தௌமியர், ''அப்பா! அன்புள்ள மாணவனே! தண்ணீரில் ஏன் படுத்திருக்கின்றாய்?'' என வினவினார். ஆருணி, ''குருநாதா! அடியேன் காலை தொடங்கி மாலை வரை மடையை அடைத்தேன். மடை அடைபடவில்லை. மடையில் அடியேன் படுத்துவிட்டேன். என்னைத் தாண்டுவதற்கு அஞ்சி தண்ணீர் தேங்கி நின்று விட்டது. அதனால், அடியேன் மடையில் படுத்திருக்கிறேன்'' என்று கூறினார்.

அவனுடைய குரு பக்தியையும் அவனைத் தாண்ட அஞ்சி நிற்கும் தண்ணீர்த் தேக்கத்தையும் கண்ட எல்லோரும் அதிசயித்து நின்றார்கள்.

குரு நாதர், ''ஆருணி, எழுந்து வா!'' என்று கட்டளை இட்டார். ஆருணி, தண்ணீரைப் பிளந்து கொண்டு வந்தான். அதனால் அவன் 'உத்தாலகன்' என்று பெயர் பெற்றான்.


உத்தாலகன் என்ற சொல்லுக்குத் தண்ணீரைப் பிளந்தவன் என்பது பொருள்.

குருநாதர் அவனை அருட்கண்ணால் பார்த்தருளி, ''உனக்குச் சகல கலைகளும் சித்திப்பதாக! நீ மெய்ஞ்ஞானச் செல்வத்தைப் பெற்று மேன்மையுடன் விளங்குவாயாக!'' என்று ஆசி கூறினார்.

உத்தாலகன் குருவின் திருவருளைப் பெற்றுப் பலகாலம் தவம் செய்து தவச் சீலனாக விளங்கினான். பலப் பல மாணவர்களுக்கு ஞானோபதேசம் செய்து ஞானாசிரியனாகத் திகழ்ந்தான்.

மூளைக்கு வேலை


மந்திர முக்கோணம்





உங்கள் நண்பர்களுக்கு ரகசியச் செய்திகளை அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அப்படியானால், இதோ ஒரு ரகசிய முறை. ஆனால் இந்த முறையில் செய்திகளை ஆங்கிலத்தில் தான் அனுப்ப முடியும். ஏனென்றால் ஆங்கில மொழிக்குத்தான் மிகக் குறைவான எழுத்துக்கள். தந்தி பாஷையில் வார்த்தை வார்த்தைகளாகச் செய்திகளை அனுப்புவது சுலபமாக இருக்கும். இதற்குப் பிரமாதமான ஆங்கில அறிவு வேண்டுமோ என்று பயப்பட வேண்டாம். நீங்கள் பள்ளியில் பயிலும் ஆங்கில அறிவே போதுமானது.


ஓர் அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் கீழே படம் 1ல் காட்டியுள்ளபடி ஒரு சம பக்க முக்கோணத்தை வெட்டிக் கொள்ளுங்கள். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பதினொரு சம பாகங்களாகப் பகுத்துச் சிறு கோடுகளால் குறித்துக் கொள்ளுங்கள். அதில் அப்பிரதட்சிணமாக A, B, C, D யைப் படத்தில் காட்டியுள்ளது போல் எழுதிக் கொள்ளுங்கள். Sம் Rம் கூடும் முனையை நோக்கி நடு மையத்திலிருந்து ஒரு கோடு கிழித்து அதில் அம்புக் குறி இடுங்கள்.

இனி அதே மாதிரி இன்னொரு முக்கோணத்தை அட்டையில் வரைந்து கொள்ளுங்கள். இது முதல் முக்கோ









ணத்தின் வெளி அளவுகளாக — அதாவது ஒரு நூல் பெரியதாக — இருக்கட்டும். ஆனால் இதை முதல் முக்கோணத்தைப் போலத் தனியாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டாம். இதன் பக்கங்களையும் பதினொரு பாகங்களாகப் பகுத்துக் கொண்டு அதில் பிரதட்சிணமாக (படம் 2) A, B, C, D எழுத்துக்களை எழுதிக் கொள்ளுங்கள். முதல் முக்கோணத்தை அம்முக்கோணத்தின் மீது வைத்து நடு மையத்தில் இரண்டையும் இணைக்கும்படிக் குண்டூசியைக் குத்தி நிறுத்துங்கள். இப்போது சதுர அட்டையில் வரைந்துள்ள (இரண்டாம்) முக்கோண அட்டையை விரல்களால் அழுத்திக் கொண்டு அதன் மேல் உள்ள முதல் முக்கோணத்தைச் சுழற்ற முடியும். ரகசியச் செய்திகளை உருவாக்கும்போது எப்போதும் அம்புக் குறியிட்ட முனை உச்சியில் இருக்கும்படி வைத்து ஆரம்பிக்க வேண்டும். கீழ்க் கோணத்தின் வெளியில் உள்ள எழுத்துக்கள் செய்தியின் **உண்மையான எழுத்துக்கள்**. மேல் முக்கோணத்தின் உட் பக்கம் உள்ள எழுத்துக்கள் செய்தியின் **சங்கேதக் குறி எழுத்துக்கள்**.

JERX CDQPG⊙X இது ஒரு (சங்கேத) ரகசியச் செய்தி. என்ன என்று புரியவில்லையல்லவா? இதன் விடையைக் கடைசியில் சொல்லுகிறேன். முதலில் ரகசியச் செய்திகளை எப்படி உருவாக்குவது என்பதைப் பார்ப்போம். ரகசியம் என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன வார்த்தை? SECRET இல்லையா? இதைச் சங்கேத மொழியில் எழுதுவதானால் எப்படி எழுதுவீர்கள்? IEPJEX என்று. இதை உருவாக்குவது எப்படி?

அம்புக் குறியைச் செங்குத்தான நிலையில் அமைத்து வெளி முக்கோணத்தில் 'S' எங்கே இருக்கிறது என்று பாருங்கள் (1). அதற்கு நேர் அருகே, உள் முக்கோணத்தில் உள்ள எழுத்து என்ன? 'I' இல்லையா? சங்கேத பாஷையில் முதல் எழுத்து I. இனி மேல் முக்கோணத்தின் அம்புக் குறியைக் கீழ் முக்கோணத்தின் வலது கைப் பக்க முனைக்குத் திருப்புங்கள் (2). செய்தியின் அடுத்த எழுத்து என்ன? 'E' இல்லையா? வெளி முக்கோணத்தில் உள்ள Eக்கு நேர் எதிரில் உள் முக்கோணத்திலிருப்பதும் E தான். ஆகவே இரண்டாவது ரகசிய எழுத்து E. மேல் முக்கோணத்தின் அம்புக் குறியைக் கீழ் முக்கோணத்தின் இடது பக்க முனைக்குத் திருப்புங்கள் (3). மூன்றும் எழுத்து C. இதற்கு நேர் எதிரில் உள் முக்கோணத்தில் இருப்பது P. அடுத்து வேண்டிய எழுத்து R. அம்புக் குறியை மறுபடி கீழ் முக்கோணத்தின் உச்சிக்குத் திருப்புங்கள் (4). Rக்கு நேர் எதிரே உள்ள எழுத்து உள் முக்கோணத்தில் J. இப்படியே அடுத்த இரு எழுத்துக்களையும் மேல் முக்கோணத்தைப் பிரதட்சிணமாக முனையோடு முனை பொருந்தும்படி அமைத்துத் திருப்பி வெளி எழுத்துக்கு நேரான உள் எழுத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். இப்போது உங்களுக்கு SECRET என்ற வார்த்தை கிடைத்திருக்கும். சங்கேத வார்த்தை 'IEPJEZ' என்று இருக்கும். இதைப் படிப்பவர்களுக்கு இதன் 'சீக்ரட்' தெரியுமா? புரியவே புரியாது! விழிப்பார்கள். ஆனால் இந்த முறையை அறிந்தவர்கள் சுலபமாக இதை விளக்குவார்கள். ரகசிய எழுத்துக்களை விடுவிக்க உள் முக்கோணத்தை முன் போலவே சுழற்றி இயக்க வேண்டும். சங்கேத எழுத்துக்களை ஒவ்வொன்றாக உள் முக்கோணத்தில் பார்த்து அதற்கு நேராக உள்ள வெளி முக்கோணத்து எழுத்துக்களை எழுதிக் கொண்டு வரவேண்டும்.

JERX CDQPG⊙X என்றால் என்ன தெரியுமா? நான் அதைச் சொல்லத்தான் வேண்டுமா? நீங்களே விடுவித்துப் பாருங்களேன்!

பிள்ளையார் சிரித்தார்!

— உமா இலக்குமி —

பூஞ்சாலை என்பது ஓர் அழகிய சிற்றூர். வளமை பொருந்திய அதன் வயல்களும் ஓங்கி நிற்கும் தென்னை மரங்களும், வளைந்து வளைந்து மலைப் பாம்பு போல் ஓடும் ஆறும், ஆற்றின் ஓரத்தில் கண்ணுக்குக் குளிர்ச்சியாகத் தெரியும் பசுமையும் அங்கிருக்கும் எவரையும் ஈர்க்காமல் இராது.

அவ்வாற்றின் அருகே எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. எல்லாருடைய கோரிக்கைகளையும் தவறாமல் நிறைவேற்றி வைக்கும் அப்பிள்ளையார் கோவிலுக்குப் பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகமாகத் தான் இருந்தது. அவர்களில் ஒருவன்தான் கந்தன். அவன் ஒரு பொற்கொல்லன். அவனுடைய மனைவி மீனாட்சி. அவர்களுக்கு ஓர் அழகிய ஆண் குழந்தையும் இருந்தது. அவன் தினமும் அதிகாலையில் எழுந்து ஆற்றில் குளித்து விட்டு அப் பிள்ளையார் கோவிலின் முன் நின்று பக்திப் பாடல்களைப் பாடி விட்டுத்தான் தன் மற்ற வேலைகளைத் தொடங்குவான். அவன் தன் குறை எதுவாக இருந்தாலும் அப்பிள்ளையாரிடம் முறையிட்டு அதில் வெற்றியும் பெற்று வந்ததால் அவன் மனத்தில் அப்பிள்ளையார் தனியிடம் பெற்று விட்டார் எனலாம். சுருங்கச் சொன்னால் தன் குழந்தையையும் மனைவியையும் விட அவன் அப்பிள்ளையாரை மிகுதியாக நேசித்து வந்தான். அவன் ஏழையாக இருந்த போதிலும் தன் அழகிய குடும்பத்தை அமைதியாக நடத்தத் தேவையான உழைப்பு அவனிடம் இருந்தது. அவன் அவ்வூரில் உள்ள மக்களுக்கு மிக நேர்த்தியாக நகைகளைச் செய்து கொடுத்ததால் அவர்களுடைய ஏகோபித்த அபிமானத்தைக் கூட அவன் பெற்றிருந்தான். ஒரு சிறிய கோளாறு நகையில் ஏற்பட்டால் கூட அதை நேர் செய்ய அவ்வூர் மக்கள் அதை அவனிடம் தான் கொடுப்பார்கள். அவ்வளவு அவனிடமும் அவன் திறமையிலும் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அவ்வூர் அரசனும் கூடத் தனக்குத் தேவையான நகைகள் அணிகலன்கள் ஆகியவை செய்வதற்குக் கந்தனையே நாடுவார்.

இரண்டு நாள் கழிந்தால் பிள்ளையார் சதுர்த்தி. கந்தனுக்கு ஒரே மகிழ்ச்சி. பிள்ளையாருக்குச் செய்யும் அபிஷேகத்திலும் ஆராதனையிலும் தன்னையே மறந்து விடுவான் கந்தன். அச்சமயந்தான் அரசரிடமிருந்து அவனுக்கு ஓர் அழைப்பு வந்தது. கந்தனிடம் அழகிய வைரக்கற்கள் பதித்த மோதிரத்தைக் கொடுத்து அதில் ஓர் கல் விழுந்து விட்டதாயும் அதைச் செப்பனிட்டுக் கொடுக்கும்படியும் கூறினார் அரசர். அவனும் அப்படியே செய்து தருவதாக வாக்களித்தான். அம் மோதிரத்தைச் செப்பனிட்டு சதுர்த்திக்குள் கொடுத்து விட்டால் பூஜைக்குத் தேவையான பணம் அவனுக்குக் கிடைத்து விடும் என்ற மகிழ்ச்சியில் மூழ்கி விட்டான் அவன். வரும் வழியில் அந்தப் பிள்ளையார் கோவிலைப் 'பார்த்து ''பிள்ளையாரப்பா உனக்கு இந்தத் தடவை ஒரு குறையும் வைக்க மாட்டேன். நைவேத்தியம், அபிஷேகம் என்று ஜமாய்த்து விடுகிறேன் பார்!'' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டான்.

அவன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் குப்பன் என்றொரு விவசாயி இருந்தான். அவன் வஞ்சகமே உருவானவன். அவனுக்கு எப்பொழுதும் அமைதியாக வாழும் கந்தனைப் பார்த்துப் பொறாமை உண்டு. அவனைத் தருணம் பார்த்துக் காலை வாரி விடக் குப்பன் காலம் பார்த்திருந்தான். இப்படிப்பட்ட அவனுடைய கழுகுக் கண்களில் கந்தன் மகிழ்ச்சியுடன் வீட்டினுள் நுழைவது தென்பட்டது. உடனே அவன் கந்தனைப் பார்த்து, ''என்னப்பா இவ்வளவு சந்தோஷம்? மகாராஜாவிடமிருந்து ஏதேனும் செய்தி வந்ததா, என்ன?'' என வினவினான். அப்பாவியான கந்தன் வைர மோதிரத்தை எடுத்துக் காட்டி அரசன் அதைச் செப்பனிட்டுக் கொடுக்கச் சொன்னதாகக் கூறினான். அதைப் பார்த்தவுடன் மின்னல் வெட்டினாற் போல் பளிச்சென்று ஓர் எண்ணம் குப்பனின் மனத்தில் உதித்தது. அதையறியாத கந்தன் 'வாயேன் நம் வீட்டிற்கு' என்று அன்போடு உபசரித்தான். மனைவியை அழைத்துக் கம்புக் கூழ் கொண்டு வந்து அவனுக்குக் கொடுக்குமாறு கூறினான். குப்பன் அக் கூழைக் குடித்தானோ இல்லையோ ஆனால் கந்தன் மோதிரத்தை செப்புப் பெட்டிக்குள் மூடிப் பரணில் வைப்பதை நன்கு கவனித்தான். பின் அவனிடம் சிறிது




நேரம் அளவளாவி விட்டுத் தன் வீட்டுக்குச் சென்று விட்டான்.

கந்தன் முதல் வேலையாக அம்மோதிரத்தைச் செப்பனிட்டு பத்திரமாக அதைச் செப்புப் பேழைக்குள் வைத்து மூடினான். அதை மறுநாள் அரசரிடம் கொடுத்து விட்டு நிறையப் பொருள் பெறலாம் என்ற மகிழ்ச்சியுடன் நிம்மதியாகக் கண்ணயர்ந்தான். மறுநாள் கந்தன் எழுந்து பிள்ளையாரை தரிசித்துக் கண்ணில் நீர் மல்க மனமுருகிப் பாடினான். பின் தன் வீட்டிற்கு வந்து உணவருந்தி விட்டு மனைவியைப் பார்த்து, ''மீனாட்சி நான் இன்று மகாராஜாவின் அரண்மனைக்குச் சென்று மோதிரத்தைக் கொடுத்து விட்டு வருகிறேன். நாளைக்குப் பிள்ளையாருக்குக் கொண்டாட்டம்தான்'' என்று கூறிவிட்டுப் பேழையைத் திறந்தான், மோதிரத்தை எடுக்க. அவன் கண்கள் இருண்டன. ''மீனாட்சி, மீனாட்சி!'' என்று உரக்கக் கத்தினான். ''இதில் இருந்த மோதிரத்தைப் பார்த்தாயா?'' அவள் இல்லையே என்று உதட்டைப் பிதுக்கினாள். கந்தனின் கண்களில் கண்ணீர் தளும்பியது. ''ஐயோ, பிள்ளையாரே நான் என்ன செய்வேன்? அம்மோதிரம் விலை மதிப்பற்றதாயிற்றே. நான் எங்கு போவேன்? நான் இத்தனை நல்ல பெயர் வாங்கியதை ஒருநாளில் குட்டிச் சுவராக்கி விட்டாயே'' என்று அழத் தொடங்கினான். சமயம் பார்த்து வந்த குப்பன் ''ஐயையோ! மோதிரத்தைக் காணோமா? அடப்பாவமே!'' என்று பரிதாபப்படுவது போல நடித்தான்.

கந்தன் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். அவன் அன்று முழுவதும் சாப்பிடவில்லை. இரவும் தூங்கவில்லை. மறுநாள் விநாயகசதுர்த்தி. ஊரே அல்லோலகல்லோலப்பட்டது. மரத்தடிப் பிள்ளையார் கோவிலில் கேட்ட மேளச் சத்தமும் தீபாராதனை மணியின் ஒலியும் கந்தனின் மனத்தைப் பிசைந்தன. அவன் மனைவி மீனாட்சி ''பிள்ளையார் சிலை வாங்கிக் கொண்டு வாருங்கள். இன்றைக்கு வந்த கவலைக்காக பிள்ளையார் பூஜையை விட்டு விடுவார்களா என்ன?'' என்ற வற்புறுத்தலின் பேரில் மனச்சுமையோடு வேண்டா வெறுப்பாக ஒரு பிள்ளையார் சிலையை வாங்கி வந்தான். அதைப் பார்க்கப் பார்க்க அவனுக்குக் கோபம்தான் மேலோங்கியது.

அவன் குளித்து முடித்துப் பூஜையறைக்குள் நுழைந்தபோது அவன் கண்டகாட்சி? அவனது குழந்தை கையை ஊன்றித் தவழ்ந்து வரும் போது சாய்வாகப் பலகையில் வைத்திருந்த களிமண் பிள்ளையாரையும் கையால் ஒரு அழுத்து அழுத்தி நகக்க அது சிதைந்து உருத் தெரியாமல் போய் விட்டது. அதைக் கண்டு ஆத்திரத்துடன் குழந்தையை அடிக்கச் சென்ற கந்தனின் கை அக் குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டது. அங்கு, சிதைந்த அப்பிள்ளையாரின் வயிற்றில் வைரக்கல் ஒளிர்விட்டுப் பிரகாசித்தது. அவன் அம்மண்ணை அகற்றிப் பார்த்தபோது அது அரசர் தனக்குக் கொடுத்த மோதிரமே எனக் கண்டு கொண்டான்.



அவன் கால்கள் அவனையும் அறியாமல் பிள்ளையார் கோவிலின் முன் வந்து நின்றது. அவன் கைகளைக் கூப்பினான். அவனால் பேச முடியவில்லை. தொண்டையை அடைத்தது. கண்ணீர் வெள்ளமாகப் பெருகிக் கொண்டே இருந்தது.

அன்று இரவு அவன் வீட்டிற்கு வந்த குப்பன் வைர மோதிரத்தைத் திருடியதையோ; அதைப் பிள்ளையார் இருந்த மரத்தடியின் கீழ்ப் புதைத்ததையோ அவன் அறியான். மறுநாள் அவ்வூர்க் குயவன் பிள்ளையார் செய்து விற்பதற்காக மரத்தடியில் உள்ள மிருதுவான களிமண்ணை வண்டியில் ஏற்றி எடுத்துச் சென்று அதே மண்ணைக்கொண்டு பிள்ளையார் செய்த பொழுதுதான் அம்மோதிரம் பிள்ளையாரின் வயிற்றில் அகப்பட்டது போன்ற எதையுமே அறியாமல் தன் முன்னால் கைகூப்பி நிற்கும் கந்தனைப் பார்த்து எல்லாம் அறிந்த விநாயகப் பெருமான் அமைதியாகச் சிரித்துக் கொண்டிருந்தார். □

விசித்திரப் பயிற்சி!

பிளாஸ்டிக்கினாலோ ரப்பரினாலோ ஆன ஒரு வளையத்தை உடலில் மாட்டிக் கொண்டு பலவித அசைவுகளினால் செய்யும் பயிற்சிக்கு 'ஹூலா ஹூப்!' என்று பெயர்.

''ஸ்வீடன், டென்மார்க், அமெரிக்கா போன்ற நாடுகளில் 'ஹூப்' பயிற்சிகள் ரொம்பப் பிரபலம். இசைக்கேற்ப இந்த ஹூப்பினால் பலவித பயிற்சிகளைச் செய்கிறார்கள்; அல்லது பயிற்சிக்கேற்ப இசை இருக்கும். ரஷ்ய ஜிம்னசிய வல்லுநர்கள்கூட இந்தத் தேகப் பயிற்சிகளை நம் இந்தியர்களுக்குச் செய்து காட்டியிருக்கிறார்கள்.

''ஒய்.எம்.சி.ஏ. தேகப் பயிற்சிக் கல்லூரியில் மாணவ மாணவிகள் ஜிம்னசிய விளையாட்டுக்களில் பன்னிரண்டு மணி நேரம் இந்த 'ஹூப்' பயிற்சிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். மாணவ மாணவிகள் ஒருமித்து இந்தப் பயிற்சியைச் செய்வதைக் காண்பது அரிய விருந்தாகும்!

''ஹூலா ஹூப் பிளாஸ்டிக் வளையத்தினைக் கொண்டு செய்யப்படுவது. தேகப் பயிற்சிக்கு மூங்கிலைக் கொண்டு செய்த வளையத்தைப் பயன்படுத்துவார்கள். இரண்டுக்கும் அவ்வளவாக வித்தியாசம் ஒன்றும் இல்லை.''

மூங்கிலினால் ஆன 'ஹூப்' வளையம் வண்ணப் பூச்சில் மிளிர்ந்து எடையற்று இருக்கும். இதன் விட்டம் 23 அங்குலத்திலிருந்து 30 அங்குலம் வரையில் இருக்கலாம்.


வில்லில் அம்பு எய்வது மாதிரிப் பயிற்சி, 'ஹூப்'களைக் கைகளில் ஏந்தி முன்னும் பின்னும் அடியெடுத்து வைக்கும் பயிற்சி, இடுப்பில் வளையத்தை மாட்டிக் கொண்டு அசையும் பயிற்சி, முதுகு வளையும் பயிற்சி என்று பலவிதமான பயிற்சிகள் உண்டு. இதில் மிகவும் கடுமையான பயிற்சிகளும் உள்ளன.

இந்த 'ஹூப்' பயிற்சிகளினால் உடல் இளைக்கவும், தேக ஆரோக்கியம் கூடவும் வழியுண்டு.

அட்டையில் உள்ள சிறுமி வைத்திருக்கும் பொம்மைக்குச் சாவி கொடுத்தால் அது தானாகவே 'ஹூலா ஹூப்' டான்ஸ் ஆடும்.

—ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியை திருமதி செரியன் அவர்களிடமிருந்து தகவல் திரட்டியவர்: குண்டுமணி. வண்ணப் படம்: சலபதி





கழுகுக் காட்சி

திருக்கழுக் குன்ற மலையினிலே
  தினமும் உச்சி வேளையிலே,
அருமைக் காட்சி கண்டிடவே
  ஆர்வமாய் மக்கள் கூடுவரே.

வானை நிமிர்ந்து பார்த்திடுவர் ;
  வருகை தன்னை நோக்கிடுவர் ;
'ஏனோ இன்னும் வரவில்லை?
  என்றே சிலரும் ஏங்கிடுவர்.

சட்டென வானில் இரு கழுகு
  வட்டம் போடும் காட்சியினைச்
சுட்டிக் காட்டுவர் சிலபேர்கள்
  துள்ளிச் சிறுவர் குதித்திடுவர்.

வட்டம் போட்ட கழுகுகளும்
  வருமே மெதுவாய்க் கீழிறங்கி
தட்டுடன் அமர்ந்த குருக்களிடம்
  தாவித் தாவிச் சென்றிடுமே.

நெய்யும் சர்க்கரைப் பொங்கலுமே
  நீட்டு வாரே குருக்களுமே.
கையால் அவரும் ஊட்டிடவே
  கழுகுகள் உண்டு களித்திடுமே.

உச்சி வேளையில் தினந்தோறும்
  ஒழுங்காய்க் கழுகுகள் வருவதையும்,
அச்சம் இன்றி உணவருந்தி
  அவைகள் பறந்து செல்வதையும்,

பற்பல ஆண்டாய் இம்மலையில்
  பார்த்தே வருவார் மக்களுமே.
அற்புதக் காட்சி இதை நானும்
  அடடா, கண்டேன், கண்டேனே!

— அழ. வள்ளியப்பா

கோபுரமாம் கோபுரம்!

கோபுரமாம் கோபுரம்
  கோல எழில் கோபுரம்
தாமிரமாம் கலசமேழும்
  தாங்கி நிற்கும் கோபுரம்


தங்க மூலாம் பூசி மின்னும்
  தகதகக்கும் கலசங்கள்
வங்கக் கடல் பார்த்து நிற்கும்
  வானளாவும் கோபுரம்

வண்ண வண்ண பொம்மை பல
  வகை வகையாய்க் கதைகள் சொல
எண்ணும் மனித நோக்குயர்வை
  எடுத்துக் காட்டும் கோபுரம்

உன்னத மாம் இறைவனது
  உறைவிடத்து நுழைவாயில்
நன்னெஞ்சம் தலை வணங்க
  நலம் தருமாம் கோபுரம்

பக்தி நெறி உணர்வினையே
  பதிய வைக்கும் கோபுரம்
சித்த சுத்தி சீரமைதி
  சேர்த்தளிக்கும் கோபுரம்

— கலாபாரதி



அன்பு மனம்

ஆழ்.வே. ராமசாமி

அன்று ஞாயிற்றுக்கிழமை. தன் நண்பன் ஒருவனைப் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் பாலு.

அவன் கடைத் தெரு வழியே வந்து கொண்டிருந்த போதுதான், அவனுக்கு எதிரே வந்தார் மாமா சுந்தரமூர்த்தி.

''என்னடா, பாலு, சௌக்கியமா? அம்மா சௌக்கியமா?'' என்று விசாரித்தார். ''வீட்டுக்கு வர முடியவில்லை. ஒரு வேலையை முன்னிட்டு அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். அம்மாவை நான் விசாரித்ததாகச் சொல்லு!'' என்றார்.

பிறகு, தம் மணிபர்ஸைத் திறந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தார். அதைப் பாலுவின் கையில் திணித்தார். ''இந்தப் பணத்தை நீ வைத்துக்கொள். நான் போய் வரட்டுமா?'' என்று விடை பெற்றுக் கொண்டார்.

''எனக்குப் பணம் வேண்டாம், மாமா'' என்றான் பாலு.

ஆனால், அவர் போய்க் கொண்டே, ''பரவாயில்லை, வைத்துக் கொள்! வீட்டுக்கு வந்தால் நான் உங்களுக்கெல்லாம் ஏதாவது வாங்கி வர மாட்டேனா என்ன?'' என்றார்.

சற்று நேரம் அப்படியே நின்றான் பாலு. அவன் கையில் புத்தம் புதிய ஓர் ஐந்து ரூபாய் நோட்டு!

அவன் அம்மாவுக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்வாள். அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. அவர்கள் வீட்டுக்கு யாராவது வரும் போது, குழந்தைகளுக்குக் காசு கொடுத்தால் அவள் விரும்பமாட்டாள். ''குழந்தைகள் கையில் காசு கொடுத்துப் பழக்கம் பண்ணாதீர்கள்'' என்பாள்.


அப்பா இறந்து போன பிறகு, அவள்தான் கஷ்டப்பட்டுக் குடும்பத்தை நடத்திக் கொண்டு போகிறாள்.

பாலுதான் மூத்த பிள்ளை. அவனுக்குப் பிறகு, தங்கை ராஜி, தம்பி சீனு, கடைசிக் குட்டி ராமு. இத்தனை பேர்களையும் வைத்துக் கொண்டு, கட்டுச் செட்டாகக் குடும்பத்தைச் சமாளிப்பது பெரிய காரியம்தான்.

வீட்டில் ஏதாவது பலகாரங்கள் செய்தால் ஒவ்வொருவருக்கும் துளித் துளிதான் கிடைக்கும். இன்னும் கொஞ்சம் சாப்பிட்டால் தேவலாம் போல் இருக்கும். ஆனால் கிடைக்காது.

அக்கம் பக்கத்தில் ஏதாவது கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தாலும் அம்மா அத்தனை குழந்தைகளையும் அனுப்பமாட்டாள்.

''மற்றவர்கள் நம்மைப் பற்றிக் குறைவாகப் பேசுவார்கள். மற்ற





வர்கள் வீட்டு விருந்துச் சாப்பாட்டை விட நம் வீட்டுப் பழைய சாதம்தான் நல்லது!'' என்பாள் அவள்.

இப்போது சுந்தரமூர்த்தி மாமா கொடுத்த பணத்தை அவன் வாங்கிக் கொண்டது தெரிந்தால் அவள் திட்டுவாள். அந்த ஐந்து ரூபாய்க்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகலாம் என்று நினைத்தான்.

அப்போது அவன் ஒரு ஹோட்டலுக்கு எதிரே வந்து கொண்டிருந்தான். அவனுக்கு ரொம்ப நாட்களாக ஓர் ஆசை : ஹோட்டலுக்குப் போய் வேண்டியதைச் சாப்பிட வேண்டும் என்பதுதான் அது. ஆனால், அது நடக்கிற காரியமாக இல்லை.

திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'இதோ, கையில் இருக்கிற இந்த ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போனால் என்ன?'

அவனுக்குப் பசி எடுப்பது போல் இருந்தது. பாலு, ஹோட்டலுக்குள் நுழைந்துவிட்டான். இரண்டு ஸ்வீட் ஸ்பெஷல் மசாலா தோசை, காபி!

ஆகா! இன்று அவன் யார் முகத்தில் விழித்தானோ? ஐந்து ரூபாயை அவன் மட்டும் செலவழித்ததால் திருப்தியாகச் சாப்பிட முடிந்தது. எல்லாருக்கும் பங்கு போட்டால் ஆளுக்கு ஒரு துண்டுகூடக் கிடைக்காது.

'இதைப் பற்றியெல்லாம் அம்மாவிடமும் தம்பி தங்கைகளிடமும் மூச்சு விடக் கூடாது' என்று முடிவு பண்ணிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான் பாலு.

அவன் தலை தெரிந்ததோ இல்லையோ, ''இதோ, பாலு அண்ணா வந்துட்டான்!'' என்று கூவினான் கடைசித் தம்பி ராமு. உடனே எல்லாரும் அவனைச் சுற்றிக் கூடிக் கொண்டார்கள்.

எதற்கு இதெல்லாம் என்று பாலுவுக்குப் புரியவில்லை.

தங்கை ராஜி சொன்னாள்: ''அண்ணா நம் வீட்டுக்கு இன்று கும்கோணத்திலிருந்து சுப்பு சித்தப்பா வந்திருந்தார். அவர் சாக்லெட் வாங்கி வந்திருந்தார். அம்மா எங்களுக்கெல்லாம் கொடுத்தாள். நீதான் எங்கேயோ போய்விட்டாயே! ஆனால், உன்னை விட்டுத் தின்ன எங்களுக்கெல்லாம் மனசே இல்லை, அண்ணா! அதனால் நீ வந்த பிறகு தின்னலாம் என்று நாங்கள் அப்படியே வைத்திருக்கிறோம், அண்ணா!''

பாலு திணறிப் போனான். அடக் கடவுளே! அவன் மேல் அவர்கள் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள். ஆனால், அவன் மட்டும் அவர்களுக்குத் தெரியாமல் ஹோட்டலுக்குப் போய் வயிறு முட்டத் தின்றுவிட்டு வந்திருக்கிறானே!

பாலுவுக்குக் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. ''இதோ வருகிறேன், ராஜி'' என்று சொல்லி விட்டுக் கிணற்றுப் பக்கம் போய்க் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

'இனி மேல் இந்த மாதிரி அற்பத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது' என்று தனக்குள் தீர்மானம் செய்து கொண்டு வீட்டுக்குள் வந்தான் பாலு.

The following particulars regarding the ownership of 'GOKULAM', the Tamil fortnightly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of publication:* Madras
2. *Periodicity of its publication:* Fortnightly
3. *Name of Printer:* V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 1-A/2, Tank Road, Nungambakkam, Madras-600 034
4. *Name of Publisher:* V. Murali
   Nationality: Indian
   Address: 29/C, Santhi Colony, Anna Nagar, Madras-600 040
5. *Name of Editor:* K. R. Athmanathan
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600 031
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*

Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Rd., Madras-600 031

V. MURALI
Publisher

1 - 3 - 76

குறுக்கு வழி

அகிலை ரத்தினசாமி

எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருப்பவன் சந்திரன். அவனுக்கு ஆங்கிலம் சுட்டுப் போட்டாலும் வராது. மற்ற பாடங்களி லெல்லாம் பாஸ் மார்க்காவது வாங்கி விடுவான். ஆனால் இந்த ஆங்கிலம் மட்டும் சிம்ம சொப்பனமாக இருந்தது சந்திரனுக்கு.

முழு வருடப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. பரீட்சையில் தேறினால் கைக் கடிகாரம் வாங்கித் தருவதாகச் சந்திரனின் அப்பா கூறியிருந்தார். ஆதலால் முழு முயற்சியுடன் படித்துக் கொண்டிருந்தான். ஆனால், மற்ற பாடங்களி லெல்லாம் தேறி ஆங்கிலத்தில் மட்டும் தேறாவிட்டால் அடுத்த வகுப்புக்குப் போகவும் முடியாது. கைக்கடிகாரமும் கிடைக்காது. ஆதலால் ஆங்கிலத்தில் பாஸ் மார்க்காவது வாங்கிவிட வேண்டும் என்ற ஆசை அவனுடைய அறிவுக் கண்ணை மறைத்தது. குறுக்கு வழியில் இறங்கச் செய்தது.

பரீட்சை ஹால். பாடப் புத்தகம், தேவையில்லாத பேப்பர்கள் ஏதாவது வைத்திருக்கிறார்களா என்று ஒவ்வொருவரையும் ஆசிரியர் சோதனையிட்டுக் கொண்டிருந்தார். ஹாலுக்குள் நுழைந்ததிலிருந்து முள்ளின் மேல் நடப்பது போலிருந்தது சந்திரனுக்கு.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் அல்லவா? ஆசிரியர் சந்திரனைச் சோதனையிட வந்தார். அவன் என்னதான் முயன்றாலும் கை கால் நடுங்காமல் நிற்க முடியவில்லை.

''என்னடா சந்திரா? பரீட்சை எழுத இத்தனை பேப்பர்களா?'' என்று ஆசிரியர் கேட்டதும் சந்திரன் பேயைக் கண்டது போல் வெல வெலத்துப் போனான்.

''அது சார்.... அது சார்...''

அவன் உளறியது ஆசிரியர் சந்தேகத்தைத் தூண்டியது. வெள்ளைப் பேப்பரை உற்றுப் பார்த்த ஆசிரியருக்கு ஆத்திரம் பொங்கியது.

சில முக்கியமான கேள்விகளின் பதில்களை மை இல்லாத பேனாவால் பரீட்சைப் பேப்பரில் எழுதி வைத்திருந்தான் சந்திரன். அதைக் கண்ட ஆசிரியருக்கு ஆத்திரம் வந்ததில் வியப்பென்ன? தலைமை ஆசிரியர் வரவழைக்கப்பட்டார். அவர் சந்திரனை மிகவும் வன்மையாகக் கண்டித்து, பிரம்பால் அடித்துவிட்டு முழு வருடப் பரீட்சை ஆதலால் வேறு பேப்பர்கள் கொடுத்துப் பரீட்சை எழுத அனுமதி தந்தார். பரீட்சை முடிந்தது. மற்ற மாணவர்களை ஏறெடுத்துப் பார்க்கவே அஞ்சி, குனிந்த தலை நிமிராமல் வீடு வந்து சேர்ந்தான் சந்திரன். அடுத்த பரீட்சைக்குப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்தாலும் பள்ளியில் நடந்த நிகழ்ச்சி அவன் நெஞ்சை நெருடிக் கொண்டிருந்தது.

வீட்டில் இருப்புக் கொள்ளாமல் கால் போன போக்கில் சிந்தனை செய்தவாறு நடந்தான் சந்திரன்.

கண்களை விழித்துப் பார்த்த சந்திரனுக்குத் தான் இருப்பது ஆஸ்பத்திரி என்றும், தன் தலையில் கட்டுப் போட்டிருப்பதும் உணர்வில் பட்டது. சோர்வால் கண்களை மூடிக்கொண்ட சந்திரனுக்கு, 'பையன் ரோட்டில் போய்க் கொண்டிருக்கும்போது, ரோட்டை முறைப்படி கடக்காமல் குறுக்கு வழியில் கடக்க முயன்றிருக்கிறான். அந்த நேரத்தில் வந்த லாரிக்காரன் முட்டித் தள்ளிவிட்டான். நல்ல காலம், லேசான காயம்தான்!' என்று யாரோ சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது.



பரீட்சையின் முடிவு வெளிவந்தது. சந்திரன் தேறவில்லை. அதற்காக அவன் வருத்தப்படவில்லை. குறுக்கு வழியில் செல்லக் கூடாது என்பது மட்டுமல்ல, தோல்வியே வெற்றியின் அடிப்படை என்பதையும் சந்திரன் இப்போது உணர்ந்திருந்தான்.

விஷமும் விஷயமும்

'நாராயண்'

'**பா**ம்பு என்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழி உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஏனெனில் உண்மையில் பாம்புகளைக் கண்டு நடுங்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாப் பாம்புகளும் விஷமுடையவை அல்ல.

உலகிலேயே மிகக் கொடிய விஷம் படைத்த பாம்பு ஆஸ்திரேலியாவில் காணப்படுகிறது. இது புலிப் பாம்பு (Tiger Snake) என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் காணப்படும் நாகப் பாம்பின் வகையை இது சேர்ந்திருந்தாலும், நாகப் பாம்பைவிடச் சுமார் நாற்பது மடங்கு கொடிய நஞ்சு படைத்தது. ஆசியாவில் கொடிய விஷம் படைத்த பாம்புகள் கட்டுவிரியன் இனத்தைச் சேர்ந்தவை.

உண்மையில் பாம்புகள் எல்லாமே சுத்தப் பயங்கொள்ளிகள்தான். நாம் இவற்றைத் தொந்தரவு செய்தாலோ அல்லது அடிக்கச் சென்றாலோதான் இவை தம்மைப் பாதுகாத்துக்கொள்ள நம்மைக் கடிக்கின்றன அல்லது சீறுகின்றன.

சிலர் தம்மை ஒரு பாம்பு மூலைக்கு மூலை துரத்திச் சென்று கடித்தது என்று கூறுவர். இது உண்மை அன்று. பாம்புகள் மனிதனைத் துரத்துவதற்கென்று வருவது இல்லை. துரத்துவது போன்று நடித்துத் தம்மைக் காத்துக் கொள்கின்றன. அவற்றின் நஞ்சும் தமது இரையின் மேல் உபயோகிக்கவே!

சிலர் கூறுவது போல் பாம்புகள் கொத்துவதில்லை; கடிக்கவே செய்கின்றன. எதிரியோ, இரையோ எதிரில் வரும்பொழுது திடீரென்று தரையிலிருந்து உயர எழும்பி, தங்கள் விஷப் பற்களை எதிரி அல்லது இரையின் உடலில் ஆழப் பதியுமாறு கடிக்கின்றன. கடிபட்ட அந்த ஆழமான காயத்தின் வழியே விஷம், விஷச் சுரப்பியினின்று விஷப் பற்கள் வழியே பாய்கிறது. இவ்வாறு நஞ்சு இரத்தத்தில் கலக்கிறது.

இவ்விஷச் சுரப்பிகள் நமது உமிழ் நீர்ச் சுரப்பியை ஒத்ததாகும். முக்கியமாக நமது காதின் கீழ் அமைந்திருக்கும் பரோட்டிட் (Parotid) உமிழ் நீர்ச் சுரப்பிகளை இவற்றுக்கு ஒப்பிடலாம். இவ்விஷச் சுரப்பிகள் நாளங்கள் வழியே விஷப் பற்களுடன் இணைந்திருக்கின்றன. இவ்விஷப் பற்கள் சிலவகைப் பாம்புகளுக்கு கூரிய கடினமான குழாய் (Tubulor) அன்றி வடிகால் (Canalised) போன்றே இருக்கும். உதாரணமாக நாகப் பாம்புகளுக்கு முதலில் கூறியது போன்று விஷப் பற்கள் இருக்கும். இன்னும் சிலவற்றுக்கு இப்பற்களைப் பயன்படுத்தாதபோது மடக்கி வைக்கவும் வழியுண்டு. இப்பாம்புகள் கடிக்கும் போது பற்கள் பளிச்சிட்டு நீள்வதைப் பார்ப்பதற்கே குலை நடுக்கம் ஏற்படும்.

கடிக்கின்றபோது மேல் அண்ணத்தில் அமைந்திருக்கும் விஷச் சுரப்பிகள் அழுத்தப்பட்டு, விஷம் வெளியேற்றப் படுகிறது. இவ்விஷம் நாளத்தின் வழியேயும், பின் பல்லின் வழியேயும் வந்து கடிபட்ட இடத்தில் இறங்குகிறது. இவையனைத்தும் ஒரு வினாடிப் போதில் நிகழ்வன. ஒரு பாம்பு ஏழெட்டுத் தடவை ஒரே அடியாகக் கடித்தால், (விஷம் இறக்குகின்றபோது வாழைத் தண்டை இம்மாதிரி கடிக்கச் செய்வர்) சுரப்பியில் உள்ள எல்லா விஷமும் வெளியேற்றப் படுகின்றது. காலியான சுரப்பியை இரண்டு, மூன்று மணி நேரங்களில் விஷம் சுரந்து மீண்டும் நிரப்பிவிடுகிறது.

பாம்புகளின் விஷம் ஒரு மணமற்ற கெட்டியான நீர் போன்றது. இதன் நிறம் பாம்புகளின் இனத்துக்கு ஏற்ப மாறுபடும். என்றாலும் பொதுவாகக் கருமஞ்சள் நிறத்தினின்று இளம்பச்சை நிறம்வரை இருக்கும். சில வகைப் பாம்பின் விஷம் மிகவும் கசப்புத் தன்மை உடையது. உதாரணமாக நாகப் பாம்பின் விஷம் இத்தன்மை உடையது. உலர்ந்த விஷம் சுமார் இருபது வருடம் வரை தன் குணம் கெடாமல் இருக்கும். இவ்வுலர்ந்த விஷத்தைத் தண்ணீரிலோ அல்லது உப்புத்தண்ணீரிலோ கலந்தால் மீண்டும் தன் குணத்தைப் பெற்றுவிடும். நகங்களையும் மயிரையும் தவிர மற்ற எல்லாவற்றையும் செரிக்கும் குணம் பாம்புகளின் நஞ்சுக்கு உண்டு.

குண வாரியாகப் பாம்புகளின் விஷங்களைப் பிரிப்பர். சில வகை விஷங்கள் திசுக்களையும், அவற்றில் அடங்கியுள்ள புரதச் சத்தையும் ஜீரணிக்கும். இவற்றுக்கு ப்ரோட்டியோலைசின் (Proteo-lysion) என்று பெயர். இதயத் துடிப்பை சில வகை நிறுத்திவிடுகின்றன. இவற்றிற்கு கார்டியோ டாக்ஸின்கள் (Cordiotoxins) என்று பெயர். மற்றும் சில இரத்த நாளங்களை ஜீரணித்து விடும். இதனால் இரத்தம் வீணாகி (haemorrhge) இறப்பு நேரிடுகிறது. இன்னும் சிலவகை விஷங்கள் மூளையையும் நரம்பு மண்டலங்களையும் பாதிக்கும். முக்கியமாக நுரையீரல் பகுதிக்குச் செல்லும் நரம்புகளைப் பாதிக்கும். இவ்வகை விஷங்களுக்கு ந்யூரோ

லைட்டோ லைஸின்கள் (Neurocyto-lysins) என்று பெயர். இரத்தத்தின் பாக்டீரியாவைக் கொல்லும் குணத்தை அழித்து நமக்கு நோயை உண்டாக்கி விடும் விஷங்களும் உண்டு.

ஒரு தடவை கடிக்கும்போது வெளியேறும் விஷத்தின் அளவு பாம்புக்குப் பாம்பு வேறுபடும். உதாரணமாக, நாகப் பாம்பு கடித்தால் சுமார் இரு நூறு மி. கிராம் விஷம் வெளியேறுகிறது. கட்டுவிரியனுக்கு இது சுமார் ஐந்திலிருந்து பத்து மி. கிராம் வரைதான். ஒவ்வொரு விஷத்தின் வீரியத்திலும் மாறுதல் உண்டு.


சில மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் விஷத்தன்மை பற்றாது என்று சிலர் கூறுவர். பன்றி, கீரி, மயில் முதலியவற்றை உதாரணமும் காட்டுவர். இதுவும் உண்மையன்று. இம்மிருகங்களுக்கு மயிர் அடர்ந்து வளர்ந்திருப்பதினாலும், தோலுக்கு அடியில் கொழுப்புச் சத்து அளவுக்கு அதிகமாக இருப்பதினாலும் பாம்புக் கடிக்குப் பெரும்பாலும் இரையாவதில்லை.

விஷத்துக்குச் சில நற்குணங்களும் உண்டு. சில வியாதிகளில் ஏற்படும் தீராத வலியைக் கட்டுப்படுத்த உபயோகப்படுகிறது விஷம். ஹோமியோபதியில் பாம்பு விஷத்தைச் சேர்த்துச் செய்த மருந்துகள் காசநோயைக் கட்டுப்படுத்த உபயோகிக்கப்படுகின்றன. அண்மையில் செய்த ஆராய்ச்சியின் முடிவுகள், நல்ல பாம்பின் விஷத்துக்குப் புற்று நோயைக் (Cancer) குணப்படுத்தும் தன்மை உண்டு என்று நிரூபிக்கின்றன.

இக்குணங்கள் பொருந்திய விஷத்தின் விலையும் விஷம் போன்றுதான் ஏறி இருக்கிறது. நாகப் பாம்பின் விஷம் ஒரு கிராமுக்கு ரூபாய் நூற்றிருபது என்றிருக்கிறது. கட்டு விரியன் விஷத்தின் விலையோ கிராமுக்கு இருநூற்றைம்பது ரூபாய். இவ்விஷத்தைப் பாமர மக்களும் மருந்தாகப் பயன்படுத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை.

புகைப்படம் உதவி : ரஷ்ய செய்தி ஸ்தாபனம்






11·4·1976

சித்திரை பிறந்தால் நமது
கோகுலத்துக்கு நாலாண்டுகள்
நிறைகின்றன. தனது ஐந்தாவது
வயதில் அடியெடுத்து வைக்கும்
உங்கள் அருமைக் குழந்தைப்
பத்திரிகைக்கு உங்கள் நல்
வாழ்த்துக்களை அளியுங்கள்.

வயிற்றுக்குச் சுவையான
உண்டி அளிப்பதில் நளமகாராஜா
கைதேர்ந்தவர் என்பது புராணம்.
அவரது பெயரைக் கொண்டு
தொடங்கும் நளவருடத்தில்
உங்கள் அறிவுக்குப் பல்சுவை
விருந்தளிக்கக் கோகுலம்
திட்டமிட்டுள்ளது.



வாண்டுமாமா

எழுதும்

புதிய சித்திரத் தொடர்




குழந்தைக் கவிஞர்


அழ. வள்ளியப்பா

எழுதும்

புதிய தொடர் கதை



கோகுலம் இதழ் முதல் புதிய பகுதிகள்!



புத்தாண்டில் பிறக்கும் புதிய பேப்பர்!



நியூஸ்-ஸென்ஸ்

கி. பி. 1857ல் சிப்பாய்க் கலகம். 1826-ல் பானிப்பட் யுத்தம். கி. பி. ஆறும் நூற்றாண்டில் மகேந்திர பல்லவர் முடி சூட்டிக் கொண்டார்' என்றெல்லாம் பழைய சரித்திரத்தை நீங்கள் தினமும் கரைத்துக் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

பொது அறிவு என்பது சரித்திரப் பாடம் மட்டும் அல்ல. நம்மைச் சுற்றி உலகத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் தினசரி நடந்து கொண்டிருக்கின்றன. புதிய சரித்திரம் படைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது; பல துறைகளில் பலரும் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நியூஸ்-ஸென்ஸ், செய்திகளில் நமக்குத் தேவை இதுதான் என்பதைப் பகுத்தறிந்து தரும். இந்த நியூஸ், எஸென்ஸாக இருக்கும். ஆனால் இது உங்களுக்கு நியூஸென்ஸாக இருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

ஆளும் மாளிகை

தராஜா

ராஜா-ராணிக் கதைகள் நிறையப் படித்திருப்பீர்கள். பொன்னும், வைரமும், தந்தமும் இழைத்த மாளிகையில் எங்கு பார்த்தாலும் முத்தும், மாணிக்கமும், வைடூரியமும், பவழமும் இறைந்து கிடக்கும்' என்ற வர்ணனைகளும் உங்களுக்குப் பழக்கமானவை. இன்று பல நாடுகளில் ராஜா-ராணிகள் இல்லை. ஆனால் அவர்கள் அமைத்த - ஆண்ட - மாளிகைகள் அப்படியே இருக்கின்றன. அவற்றில் இப்போது மக்கள் தலைவர்கள் இருந்து ஆட்சி புரிகிறார்கள். அப்படிப்பட்ட 'ஆளும் மாளிகை'களின் கதைகள் இவை.

சமர்த்துச் சாரு

பலே பாலுவுக்குச் சவால் விடுவாள்!



மீனுவின் ஆசை!

தா.பி.வரதராஜன்

எட்டு வயது மீனுவுக்கு விபரீதமான ஓர் ஆசை. நீண்ட நெடுங்காலமாகவே அவள் மனத்தில் அது கிடந்து துடித்துக் கொண்டிருந்தது. போலீஸ்காரர் ஒருவரின் தொப்பியை எப்படியாவது வாங்கி ஒரு தடவையாவது தான் போட்டுப் பார்க்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

ஆனால், அவளுடைய உறவினர்களிலேயோ, கூடப் படிக்கிறவர்களின் பெற்றோர்களிலேயோ போலீஸ்காரராக ஒருவரும் இல்லாதது அவளுக்கு ஒரு பெரும் மனக் குறை.

அந்த மாதிரியான ஒரு மனக் குறை திடீரென நிறைவேறக்கூடிய ஒரு வாய்ப்பு அவளுக்கு வந்து சேர்ந்தது ஒரு சமயம். அதை நினைத்தாலே சிரிப்புச் சிரிப்பாக வரும் அவளுக்கு.

ஒரு நாள் மீனுவின் அம்மா வீட்டுக் குப்பையை அள்ளி அவளிடம் கொடுத்து தெருவில் உள்ள குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு வரும்படி கூறினாள். அவள் அதைச் சிறு முறத்தில் எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டுக்கு எதிர்த்தாற் போல் இருந்த குப்பைத் தொட்டியை நோக்கி வந்த போதுதான் திடீரென அந்த ஆள் அவள் முன் வந்தான்.

''கொழந்தே, இந்தத் தொட்டி நிரம்பிடுச்சு. இங்கே போடாதேம்மா. அதோ, தெருக் கோடியில் இருக்கே, அங்கே கொண்டு போய்ப் போடும்மா.. நல்ல பெண்ணில்லே நீ!'' என்று கூறினான் அவன்.

உடனே, அவனுடைய இந்தக் கெஞ்சுதலான சொற்களுக்குப் பணிந்து தெரு முனையை நோக்கி நடக்கத் தொடங்கினாள் அவள். அப்போது, அவளையே பின்தொடர்ந்து வந்த அவன், குப்பைத் தொட்டியில் குப்பையைக் கொட்டும்போது திடீரென வந்து கைகளைப் பற்றிக் கொண்டான். அதோடு சிறு கத்தியை அவள் முன் நீட்டி, ''கத்தினே, குத்திடுவேன் கத்தியாலே'' என்று மிரட்டி, அப்படியே அவளைத் தூக்கித் தோளில் உட்கார்த்திக் கொண்டு, மிக வேகமாக நடக்கத் தொடங்கினான்.

மீனுவின் நெஞ்சு 'பட் பட்' என்று அடித்துக் கொண்டது. ஊரிலே பிள்ளை பிடிக்கிறவர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது, தெருவிலே விளையாடக் கிளையாடப் போக வேண்டாம் என்று தனக்கும் தன் தம்பி தங்கைகளுக்கும் அப்பா போட்டிருந்த தடை உத்தரவு அப்போது அவள் நினைவுக்கு வந்தது. வந்து என்ன பிரயோசனம்? பிள்ளை பிடிக்கிறவனிடம் அகப்பட்டுக் கொண்டாகிவிட்டது? இனி அவன் என்ன செய்வானோ?

அந்த விடியற்கால நேரத்தில், ஆட்கள் அதிகமாகத் தெருவில் நடமாடவில்லை என்றாலும், தென்படுகின்ற ஓரிருவரும் கூட, கிராமத்து ஆள்போல் தென்படும் அவன் தன் சொந்த மகளைத் தான் அப்படித் தூக்கிக் கொண்டு போகிறான் என்று எண்ணிக் கொண்டு சும்மா போனார்கள்.

அவள் அழுது கூக்குரல் எழுப்பினால், ஒரு வேளை இவளைக் கண்டு உதைத்து, தன்னை விடுத்து விடுவார்கள். ஆனால் கத்தினால் குத்திவிடுவதாகக் கூறி, அக்கத்தியை ஒரு கையில் ஒளித்து வைத்து, அவள் இடுப்புக்குப் பக்கத்திலேயே அல்லவா வைத்துக் கொண்டிருக்கிறான்.

'ஐயோ, இந்தப் படுபாவியிடம் அகப்பட்டுக்கொண்டோமே!' என்று பயந்து கொண்டே, அவன் தோள் மேல் அமர்ந்து, கிராமத்துச் சிறுமி ஒருத்தி திருவிழாப் பார்க்கப் போவது போல் போய்க் கொண்டிருந்த மீனுவுக்கு, அந்த இக்கட்டான நேரத்தில்தான் தன்னுடைய நீண்ட நாளைய ஆசை நிறைவேறப் போகிறது என்று தெரியவேயில்லை, முதலில்.

அப்போது இவர்களின் எதிரே போலீஸ்காரர் ஒருவர் வருவது தெரிந்தது மீனுவுக்கு. போலீஸ்காரரைக் கண்டதும், தொடர்ந்து அவர் தொப்பியைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவள் நினைவுக்கு வந்து விட்டது. அதுவும் தவிர, இப்போது அவள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து போலீஸ்காரரின் தொப்பியை எளிதில் எட்டி எடுத்துவிடலாம். 'எதிரே வருகிறவர், பக்கத்திலே வரக் கூடாதா?' என்று அந்த அச்சம் மிகுந்த நேரத்திலும் அவள் நினைக்கத்தான் செய்தாள்.

ஆனால் போலீஸ்காரர் ஒரு திருடன் ஒரு பெண்ணைத் திருடிக் கொண்டு போகிறான் என்று கண்டாரா என்ன? யாரோ கிராமத்து ஆள் தன் மகளைச் சுமந்து கொண்டு போகிறார் என்று தான் எண்ணியிருக்க வேண்டும். போலீஸ்காரருக்கு இந்த எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே திருடன் அவரைக் கண்டு ஒன்றும்

தெரிந்துகொள்ளுங்கள் !

பிஸ்கட் என்று சொல்லப்படும் ஆங்கிலச் சொல் எப்படி உருவானது என்று தெரியுமா ? உண்மையில் அது ஆங்கிலச் சொல்லேயல்ல. 'பிஸ்கோத்து' எனப்படும் பிரெஞ்சுச் சொல்லில் இருந்து ஆக்கப்பட்டதே 'பிஸ்கட்.' என்பதாகும். 'பிஸ்கோத்து' என்ற பிரெஞ்சுச் சொல்லும், பிரெஞ்சுமொழியினால் உருவாக்கப்பட்டதல்ல. இலத்தீன் மொழியில் 'பிஸ்கோடமா' எனும் சொல்லில் இருந்தே 'பிஸ்கோத்து' எனும் பிரெஞ்சுச் சொல் உருவானது. 'பிஸ்கோடமா' என்றால் 'இரண்டு முறை சுடப்பட்டது' என்று பொருளாகும். அக்காலத்தில் களிமண்ணால் இருமுறை சுடப்பட்டு உருவான பொருள்கள் 'பிஸ்கோடமா' எனப்பட்டன. பின்னர், தற்போது நாம் சாப்பிடும் பிஸ்கட்டுக்கும் இருமுறை சுடப்பட்டுத் தயாரிக்கப்பட்டதால், அப் பெயர் வழங்கப்பட்டது.

இலங்கை வானொலியில் கேட்டவர் : செல்வா

பயப்படாதவன் போல் அவரை நெருக்கமாக அணுகி முன்னே நடக்கப் போன போது மீனுவின் கை, சடாரெனப் பாய்ந்து, போலீஸ்காரரின் தலைக்குத் தாவி, அவர் தொப்பியைக் கவர்ந்து, அவள் தலையில் வைத்தும் விட்டது.

அவ்வளவுதான் ! தொப்பி பறிபோன போலீஸ்காரர், ''ஏய், ஏய்'' என்று அலறிக் கொண்டே பின்னால் திரும்பி ஓடி வர, திருடன் தன்னைத் தான் போலீஸ்காரர் விரட்டுவதாக எண்ணிப் பயந்து ஓட — இந்த ஓட்டப் பந்தயத்தின் ஊடே போலீஸ் தொப்பி தரித்து, கன கம்பீரமாக அமர்ந்திருந்தாள் மீனு. அவள் ஆசை நிறைவேறி விட்டதில் அவளுக்கு மகிழ்ச்சி! திருடனுக்கோ, தன் தோளின் மேல் உள்ள பெண் தொப்பியைப் பறித்ததும், போலீஸ்காரர் அதற்காகத் தான் விரட்டி வருகிறார் என்பதும் தெரியாது. அவர் தன்னைத்தான் விரட்டுகிறார் என்ற அச்சத்தில் படு வேகமாக ஓடத் தொடங்கினான். மீனுவுக்கோ தொப்பியுடன் குதிரை சவாரியும் கிடைத்துவிட்டது!

நீண்ட ஓட்டப் பந்தயத்துக்குப் பிறகு, திருடனைப் பிடித்து விட்டார் போலீஸ்காரர். பிடித்த பிறகுதான் அவனைத் தெரிந்திருக்கிறது அவருக்கு. ''அடேடே, படுபாவி! கொலைகாரக் கோதண்டா! ஜெயில்லேயிருந்து தப்பிச்சுக்கிட்ட உன்னை மூணு நாளா நாங்க எங்கெங்கே தேடி அலையறது ? நீட்டுடா கையை!'' என்ற போலீஸ்காரரை நோக்கி, ''மாமா, என்னை மன்னிச்சிடுங்க, மாமா !'' என்று கைகளில் தொப்பியுடன் வணங்கினாள் மீனுக் குட்டி.

''பாப்பா, உன்னை நானு மன்னிக்கிறது? நீ பெரிய சி. ஐ. டி. வேலை பண்ணியிருக்கிறியே !'' இந்தக் கொலைகாரப் பாவி என் முன்னாலேயே வந்தும், நான் கவனிக்காமப் போய்க்கிட்டிருந்தனை, நீ தொப்பியை எடுத்ததன் மூலம் என்னைத் தடுத்து நிறுத்தி, இவனைப் பிடிச்சுக் கொடுத்துட்டியே உன்னை என்னன்னு பாராட்டறது ! போலீஸ் உனக்கு நிச்சயமாப் பரிசு கொடுக்கும்'' என்றார் போலீஸ்காரர்.

மீனுவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி : தொப்பி போட்டுப் பார்க்க வேண்டும் என்ற தன்னுடைய நீண்ட நாளைய ஆசை நிறைவேறியது ஒன்று. மற்றொன்று, பெரிய திருடனைப் போலீஸாரிடம் பிடித்துத் தந்தது.



வளம் தரு வீதியிலே...

தேவைப் பொருள்கள் மீதான வரி மேலும் குறைகிறது

கட்டம் கட்டமாக சர்க்கரை, தீப்பெட்டி, காலணிகள் போன்ற அன்றாடத் தேவைப்-பொருள்கள் மீதான சுங்கவரி குறைக்கப்படுகிறது. 1951-ல் 46 சதவிகிதமாக இருந்த வரி இன்று 17 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்கூட இப்பொருள்கள்மீது 31 சதவிகித வரி விதிப்பு இருந்தது.



நெஞ்சில் உரமும்
செயலில் திறனும்
உறுதுணை நிற்கும்

davp 79/451



டோங்கா

கிருஷ்ணவேணி

ஆண்டுத் தேர்வுப் பரீட்சைக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள் கிட்டும் பட்டுவும். படித்துப் படித்துக் களைப்படைந்து போயிருக்கும் மூளைக்கு ஓய்வளிக்க வேறு விஷயங்களில் கவனத்தைத் திருப்ப எண்ணிய பரமேசுவரத் தாத்தா, "சமீபத்தில் பாரதத் தலைநகருக்கு ஓர் அந்நிய நாட்டு மன்னரும் ராணியும் வந்திருந்தார்களே, தெரியுமா?" என்று ஆரம்பித்தார். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு இடுப்பைத் திருப்பி நெட்டி முறித்தபடி தாத்தாவின் அருகே வந்து அமர்ந்து கொண்டான் கிட்டு. பாடத்திலிருந்து மாறுபட்ட வேறு ஏதாவது விஷயங்களைக் கேட்க வேண்டும் என்று அவனுக்கும் ஆவலாக இருந்தது. தாத்தாவுடன் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்து வெகு நாட்களாகி விட்டதே.

"பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருப்பதால் செய்திப் பத்திரிகைகளைப் பார்க்கவே இல்லை, தாத்தா! எந்த நாட்டு ராஜா வந்திருந்தார் தாத்தா?" என்று கேட்டான் கிட்டு.

"டோங்கா என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"தெரியுமே! வட நாட்டில் உள்ள குதிரை வண்டிகளுக்கு டோங்கா என்றுதானே பெயர்?" என்று கூறியபடி பட்டுவும் தாத்தாவின் இன்னொரு பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"இந்த டோங்கா என்பது குதிரை வண்டியில்லே. அது ஒரு நாடு. பசிபிக் மகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நியூஸிலாந்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நூற்று'ஐம்பது தீவுகளைக் கொண்ட ஒரு நாடுதான் டோங்கா (Tonga). இதன் மன்னரும் ராணியும் தான் கடந்த மாதம் பாரதத்துக்கு வந்திருந்தார்கள். பத்திரிகைகளில் அவர்களுடைய படங்கள்கூட வந்திருந்தன" என்றார் தாத்தா.

"டோங்கா என்பது ஒரு நாடா? ஐயோடி!" என்று வியப்புத் தெரிவித்தாள் பட்டு.

"தாத்தா, பாடங்களைப் படித்து எங்கள் மூளை ரொம்பக் களைத்துப்போய் இருக்கு. தவிர இப்போதெல்லாம் நீங்கள் எங்களை 'எங்கும் அழைத்துப் போகப் போவதும் இல்லை. ஆகவே அந்த டோங்கா நாட்டைப் பற்றிச் சாங்கோபாங்கமாக நீங்களே கூறிவிடுங்கள். நீங்கள் குறிப்பிடும் எல்லையில் உள்ள தேசத்துக்குப் போலினீஷியா என்றும் அங்கு வாழ்பவர்கள் போலினீஷியர்கள் என்று மட்டும் தெரியும். சரிதானே?" என்றான் கிட்டு.

"ரொம்பக் கரெக்ட். அது போலினீஷியாதான். அது சரி. அந்த வார்த்தை எந்த மொழியிலிருந்து வந்தது தெரியுமா? கிரேக்க மொழியிலிருந்து. போலி என்றால் 'அநேகம்' என்று அர்த்தம். நெஸாஸ் என்றால் தீவுகள். தென் பசிபிக் கடலில் உள்ள ஏராளமான தீவுக் கூட்டங்களுக்குப் போலினீஷியா என்று பெயர். பல நூறு தீவுகள் சிதறிக் கிடக்கின்றன இங்கே. சில பெரிய தீவுகள், பல மிகச் சிறியவை. தேசப் படத்தில் குறிக்க முடியாத அளவுக்குச் சிறிய தீவுகள் எத்தனை எத்தனையோ? பல தீவுகள் கடலுக்குள் மூழ்கிய எரிமலை உச்சிகள். இன்னும் பல பவழப் பூச்சிகளால் உருவான பாறைகள். போலினீஷியாவில் மிகப் பிரபலமான தீவுக் கூட்டங்கள் ஹவாய் (Hawai), சமோவா (Samoa), டோங்கா (Tonga), சொஸைட்டி (Society), மார்க்விஸாஸ் (Marquesas), குக் (Cook), ஈஸ்டர் தீவுகள் (Easter Islands) ஆகியவை. இவை உஷ்ண, மித உஷ்ணப்

பிரதேசங்கள். ஈரம் கலந்த கடற் காற்று வீசும்.

போலினீஷியர்கள் உயரமானவர்கள். கருங் கூந்தல் அலை அலையாக அடர்ந்து வளர்ந்திருக்கும். பெரிய கண்கள். இந்தத் தீவுகளில் இவர்கள் எங்கிருந்து எப்போது வந்து குடியேறினார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. போலினீஷியர்களுக்கு எழுதப்பட்ட சரித்திரம் ஏதும் கிடையாது. மூதாதையர்களின் பெயர்களையும் அவர்கள் புரிந்த சாகஸங்களையும் கர்ணபரம்பரைக் கதையாகத் தங்கள் குழந்தைகளுக்குக் கூறி வருகிறார்கள்.

போலினீஷியர்கள் இந்தியாவிலிருந்து இந்தோனேஷியா வழியாக வந்தவர்கள் என்று ஒரு கூற்றும், தென் அமெரிக்காவின் பெரு என்ற நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று ஒரு அபிப்பிராயமும் நிலவி வருகிறது. ஆனால் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்பதற்கு ஆதரவாக இவர்கள் பழக்க வழக்கங்கள் இருக்கின்றன.



போலினீஷியர்களைப் பற்றிப் பொதுவான தகவல் இவை. இனி டோங்கா மக்களைப் பற்றிச் சொல்லுகிறேன். நூற்றைம்பதுக்கு மேற்பட்ட தீவுக் கூட்டங்களைக் கொண்ட டோங்காவைத் தோழமைத் தீவுகள் (Friendly Islands) என்று அழைப்பார்கள். இத்தீவுகளில் பல திடீர் திடீர் என்று தோன்றும் மறையும். விந்தையான செயல் இது.

ராஜாளித் தீவு (Falcon Island) என்று ஒரு தீவு. 1865ல் ஃபால்கன் என்ற கப்பல் ஸர்வே செய்வதற்காக இப்பகுதிக்கு வந்தது. ஒரு பழைய வரைபடத்தில் அங்கு ஒரு கடற் பாறை இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அங்கு போனபோது ஒரு பெரிய தீவையே கண்டார்கள். அதற்குக் கப்பலின் பெயரையே சூட்டினார்கள், ஃபால்கன் தீவு என்று. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னொரு கப்பல் அங்கு போன போது அப்படியொரு தீவையே காணவில்லை. தீவிருந்த இடத்தில் கடலும் அங்கிருந்து வெறும் புகையுமே வந்து கொண்டிருந்தன. இதற்கு எட்டாண்டுகளுக்குப் பிறகு அந்தத் தீவு மறுபடி தோன்றியது! கடல் மட்டத்துக்கு மேலாகப் பதின்மூன்று ஆண்டுகள் வரை இந்தத் தீவு இருந்தது. மறுபடியும் மாயமாக மறைந்தது. இதன் பிறகு முப்பது ஆண்டுகள் சென்றன. மறைந்த ராஜாளித் தீவு தோன்றவில்லை. கடலுக்கு அடியில் குமுறிய எரிமலை ஒரு நாள் ஏராளமான நீராவிகளையும், சாம்பலையும் மேலே கொண்டு வந்து தள்ளின. மெல்ல மெல்ல ஃபால்கன் தீவு உதயமாயிற்று. கடல் மட்டத்துக்கு மேலே 350 அடிகள் உயரம்வரை வளர்ந்து கொண்டே போயிற்று. ஒரு நிலையில் இதன் வளர்ச்சி நின்றது. பெரு மழை இந்த மண் மேட்டைக் கடல் நீரில் கரைக்க மறுபடியும் இத்தீவு மறைந்தது.

இதே மாதிரி இன்னொரு தீவில் அடிக்கடி எரிமலைக் குழம்புகள் பொங்கிப் பொங்கி வழிந்ததினால் இங்குள்ள ஜனங்கள் இத்தீவை விட்டு வெளியேறினார்கள். இதன் பெயர் நியுவாஃபோவா (Niuafoau) என்பது. ஆனால் இதைத் தகரடப்பாத் தீவு (Tin Can Island) என்றுதான் அழைப்பார்கள். ஏன் இப்படி? இதி

தீவுக்குக் கடற்கரையே கிடையாது. இதைச் செங்குத்தான மலைகளே சூழ்ந்திருக்கும். இத்தீவுக்குள் போக வேண்டுமானால் படகில் வந்து பாறையின் ஓரமாக ஒதுக்கி நிறுத்தித் தாண்டிக் குதிக்க வேண்டும். பெரிய கப்பல்கள் இதன் அருகே வர முடியாது. இந்தத் தீவில் பல ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். மற்ற தீவு மக்களோடு கடிதத் தொடர்பு கொள்ள வேண்டாமா? பிஜி, நியூஸிலாந்து ஆகிய இடங்களிலிருந்து மாதம் ஒரு முறை தபால்களைச் சுமந்து ஸ்டீமர்கள் வந்து இத்தீவுக்கு வெகு தூரத்தில் நங்கூரமிட்டு நிற்கும்—தீவின் சிறந்த நீச்சல்காரர்கள் கப்பலை நோக்கி நீந்திப் போவார்கள். தீவிலிருந்து செல்லும் தபால்களை எண்ணெய்க் காகிதத்தில் சுற்றி எடுத்துப் போவார்கள் நீச்சல்



காரர்கள். இந்தத் தீவுக்கான தபால்களை ஒரு பழைய பாரஃபின் மெழுகு டின்னினுள் போட்டுக் கப்பலிலிருந்து அதைக் கடலில் வீசுவார்கள். நீச்சல்காரர்கள் அந்த டின்களைச் சேகரித்துக் கொண்டு தீவுக்குத் திரும்புவார்கள். இப்படிப் பட்டுவாடா செய்யப்படும் தபால்களின் மீது 'டின்கான் மெயில்' (Tin Can Mail) என்று முத்திரை இடப்பட்டிருக்கும். ஆகவே இந்தத் தீவுக்கும் பழைய தகர டப்பா தீவு என்றே பெயர் வந்துவிட்டது.

மலைகள் அதிகம் இல்லாத தீவுகளில் கடற்கரை ஓரங்களில் கும்பலாக வீடுகள் காணப்படும். தங்கக் கடற்கரையில் பவழ மணல் பரப்பை அடுத்துள்ள நீலக் கடலும் அதன் நடு நடுவே பவழப் பாறைகள் சூழ்ந்த கடற் கழிகளும் — அடடா....! காணக் கண் கோடி வேண்டும். நோக்கும் இடமெல்லாம் நெடிதுயர்ந்த தென்னை மரங்கள் கடலை முத்தமிடுவது போல வளைந்து வளர்ந்திருக்கும். டோங்காவில் பண்டைய முறை வீடுகள் கனமான மரத் தூண்களின் மீது எழுப்பப்பட்டவை. கோரை புற்களால் பின்னப்பட்ட தட்டிகள் சுவர்களாக இருக்கும். கரும்புத் தோகையாலோ, தென்னை ஓலைகளாலோ மேற்கூரை வேயப்பட்டிருக்கும். இம்மாதிரி வீடுகளை உருவாக்க ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுவார்கள். கூரைவீடு கட்ட ஆணிகளைப் பயன்படுத்துவது இல்லை. நம் நாட்டைப் போலவே தேங்காய் நாரிலிருந்து கயிறு திரித்து அதைக் கொண்டு கட்டுகிறார்கள். தரையில் தென்னங் கீற்றினால் ஆன பாய்களே விரிப்பாகப் பயன்படுகின்றன. தென்னோலையால் பின்னப்பட்ட தட்டிகளையும் பாய்களையும் பலவிதங்களில் பயன்படுத்துகிறார்கள். மத சம்பந்தமான விழாக்களின் போது இம்மாதிரித் தென்னோலைப் பாய்களையே ஆடைகளாகவும் அணிகிறார்கள். டோங்காவின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள் கொப்பரைத் தேங்காய். பிரிட்டிஷ் மக்கள் சோப்பு, மாட்டுத் தீவனம் (தேங்காய்ப் புண்ணாக்கு) மார்க்கரைன் ஆகியவைகளுக்கு டோங்கா மக்கள் அனுப்பும் கொப்பரைத் தேங்காய்களையே நம்பி இருக்கிறார்கள். தென்னையைப் போலவே இங்கு வாழையும் ஏராளம். நியூஸிலாந்துக்கு வாழைப் பழங்களை ஏராளமாக அனுப்புகிறார்கள். கிராமத்தின் முக்கியமான மனித

ரின் வீடுகள் மட்டும் கல் மேடைகள் மீது எழுப்பப்படும். நாகரிகம் வளர்ந்து விட்ட நிலையில் இன்று ஐரோப்பிய முறையில் பல வீடுகள் உருவாகியுள்ளன. இங்கு குடியேறியுள்ள ஐரோப்பியர்களின் கைங்கரியம் இது. இந்தியர்களைப் போலவே கொட்டாங்கச்சி அகப்பைகளையே டோங்காளியர் பயன்படுத்துகின்றனர். டோங்காளியர்களின் ஆடைகள் மிக மிக எளிமையானவை. உடலைக் கதகதப்பாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாததினால் ஆண்கள் இடையில் ஒரு துண்டைச் சுற்றிக்கொண்டிருப்பார்கள். மற்றப்படி திறந்த உடல். பெண்கள் இலைகளாலோ புல்லாலோ உருவாக்கிய ஸ்கர்ட் மட்டுமே அணிந்திருப்பர். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இங்கு குடியேறி மதத்தில் மட்டுமின்றி இவர்களின் உடையிலும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டார்கள். போலினீஷியர்களுக்கு நகைகள் அணிவது என்றால் கொள்ளை ஆசை. முக்கியமாகத் தலை முடியைச் சிங்காரித்து மலர் சூடி மகிழ்வார்கள்.



பச்சை குத்திக் கொள்ளுவதிலும் விருப்பம் உடையவர்கள்.

டோங்காளியர்களின் பிரதான உணவு மரக்கறிதான். தேங்காய், வாழை முக்கிய இடம் வகிக்கும். பலவிதப் பழங்கள், கிழங்குகளையும் உண்பார்கள். விசேஷ நாட்களில் பன்றி, கோழி ஆகியவைகளின் இறைச்சியைப் பக்குவம் செய்து உண்பார்கள். பண்டைய டோங்காளியர்களுக்கு பானைகளின் உபயோகம் தெரியாது. உணவுப் பொருள்களைப் பக்குவம் செய்ய அவைகளை இலைகளில் சுற்றி குழிக்குள் வைத்து அதைக் கொதிக்க வைத்த கற்களைக் கொண்டு மூடி விடுவார்கள். உணவுப் பொருள்கள் தானாகப் பக்குவம் ஆகிவிடும். இந்த முறை இன்றும்கூடப் பழக்கத்தில் உள்ளது. டோங்காளியர்களின் உணவில் மீனும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சுற்றிலும் பெருங்கடலை வைத்துக் கொண்டு மீன் சாப்பிடாமல் எப்படி? டோங்காளியர் ஆண் பெண் குழந்தைகள் எல்லோருமே நீந்துவதிலும் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள்.

மிளகுச் செடியின் வேரிலிருந்து தயாரிக்கப்படும் 'காவா' என்ற பானத்தைப் பருகுவதும் போலினீஷியர்களின் மதச் சடங்குகளில் ஒன்று.

புராதன டோங்காளியர்கள் இயற்கையையே கடவுளாக வணங்கினர். முக்கியமாக சூரிய வழிபாடுடையவர்கள். பல தீவுகளில் டாங்கரோவா (Tangaroh) என்பவரே கடவுளின் கடவுள். வேறு பல தெய்வங்களும் உண்டு.

டோங்காவில் ஒவ்வொரு கிராமத்திலும் இன்று ஒரு 'மெதாடிஸ்' மாதா கோயிலையும் பள்ளியையும் 'கம்யூனிடி ஹாலை'யும் காணலாம். இந்தப் பொதுநலக் கூடத்தின் உபயோகம் இங்கு கிராம மக்கள் டாபா (Tapa) தயாரிப்பதில் ஈடுபடுவதுதான். டாபா என்பது என்ன தெரியுமா? டோங்காளியர்களின் ஆடைக்கு டாபா என்று பெயர். மால்பரி மரத்தின் உள் பட்டையிலிருந்து தயாரிக்கிறார்கள் டாபா என்ற துணியை. இந்த மரம் டோங்காத் தீவுகள் எங்கும் ஏராளமாக வளர்ந்திருக்கும். இம்மரத்தின் மேல் பட்டையினால் பயனில்லை. இதை அப்புறப்படுத்தித் தூர எறிந்துவிடுவார்கள். உள் பட்டையை நீரில் ஊற வைப்பார்கள். பிறகு உள் குழிவான நீண்ட மரத்தின் இரு பக்கத்திலும் பெண்கள் அமர்ந்தபடி மால்பரி மர உள் பட்டையை அடித்துத் துவைத்து நூல் இழைகளைப் பிரித்தெடுப்பார்கள். இந்தச் செயலின் போது ஏற்படும் ஓசை மிகப் பிரசித்தமாகும். கிராமப் பெண்கள் ஒன்றுகூடி வம்பளப்பதற்கு இந்த டாபா தயாரிப்பு வழி வகுத்துக் கொடுக்கிறது. இப்படித் தயாரித்த டாபா துணிக்குக் கறுப்பு அல்லது செங்கறுப்பு நிறத்தைச் சாயமேற்றுவர்.


டோங்காவின் தலைநகர் எது தெரியுமா? நுகோலோஃபா (Nukualofa) என்பதாகும். இது டோங்கா டாபூ என்ற தீவில் உள்ளது. டோங்கா நாட்டு மன்னர் பாரதத்தைப் பற்றி என்ன சொன்னார் என்பதைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்களோ?''

தாத்தா டோங்கா புராணத்தை முடித்ததும் இட்டுவும் பட்டுவும் இந்த ஆண்டு கோடை விடுமுறைக்குத் தங்களை டோங்காவுக்கு அழைத்துப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ''பார்க்கலாம்'' என்றார் பரமேஸ்வரத் தாத்தா.

ஏது பெட்டி?

சரோஜா ரங்கராஜன்

ஒரு ஊரில் வைர வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பெயர் காசிம். அவன் ஒவ்வொரு நகரமாகச் சென்று பணக்காரர்களிடம் தன்னிடமுள்ள வைரத்தை விற்று வாழ்க்கை நடத்தி வந்தான். ஒரு சமயம் அவன் ஒரு நகரத்துக்கு வைரம் விற்க வந்தான். பகல் முழுவதும் வைரத்தை எடுத்துக் கொண்டு விற்றுக் கொண்டிருந்தான். இரவும் வந்தது. அவன் தங்குவதற்கு ஒரு பணக்காரரின் வீட்டை அடைந்தான். பணக்காரன் பார்ப்பதற்கு நல்லவனாகத் தெரிந்தான். ஆகவே வைர வியாபாரி அவனிடம் தங்குவதற்கு இடம் கேட்டான். பணக்காரனும் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தான். வைர வியாபாரி தனது வைரங்கள் அடங்கிய பெட்டியைப் பணக்காரனிடம் கொடுத்து ஜாக்கிரதையாக வைக்கும்படிச் சொன்னான். மறுநாள் காலையில் அதைத் திரும்ப வாங்கிக் கொள்வதாகவும் கூறினான். இரவு கழிந்தது, பொழுது விடிந்தது. வைர வியாபாரி தனது வைரப் பெட்டியைக் கொடுக்கும்படி பணக்காரனிடம் கேட்டான். பணக்காரனின் மனம் வைரங்களைப் பார்த்ததினால் மாறி விட்டிருந்தது. அவன் வைர வியாபாரியிடம் சொன்னான், ''ஏன் ஐயா, ஏதாவது கனவு கண்டாயா? என்னிடம் நீ எப்பொழுது பெட்டியைக் கொடுத்தாய்? ஏதோ, போனால் போகிறது என்று தங்குவதற்கு இடம் கொடுத்தால் பெட்டியைக் கேட்கிறாயே?'' இதைக் கேட்ட வைர வியாபாரி திகைத்துப் போனான். அவனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. பலமுறைக் கேட்டுப் பார்த்தும் பணக்காரன் பெட்டியைத் தர மறுத்ததால் வைர வியாபாரி அவ்வூர் அரசனிடம் நீதி கேட்கச் சென்றான். அரசன் பணக்காரனைக் கூப்பிட்டு விசாரித்தான்.



பணக்காரன், ''அரசே! இவனுக்கு நான் இரவு தங்குவதற்கு இடமளித்தேன். ஆனால் இவன் தனது பெட்டியை என்னிடம் கொடுத்ததாகவும், அதைத் திருப்பித் தரும்படியும் கேட்கிறான். இவன் உண்மையில் என்னிடம் பெட்டி எதுவும் தரவில்லை'' என்று கூறினான். உடனே அரசன் பணக்காரனிடம் ''சரி, அப்படியானால் நீ உனது மனைவிக்கு ஒரு கடிதம் எழுதி இவ் வைர வியாபாரியிடம் கொடுத்தனுப்பு. அக் கடிதத்தில், 'நம் வீட்டில் இருக்கும் இவ் வைர வியாபாரியின் பெட்டியை இவனிடம் கொடுத்தனுப்பவும்' என்று எழுது.''

இதைக் கேட்ட பணக்காரன் திடுக்கிட்டான். உடனே சாமர்த்தியமாகக் கூறினான், ''அரசே! என்னிடம் பெட்டியே இல்லாத பொழுது நான் ஏன் என் மனைவிக்குக் கடிதம் எழுதித் தர

வேண்டும்'' என்று கூறினான். அதற்கு அரசன், ''உன்னிடம் தான் பெட்டி இல்லையே! பிறகு நீ ஏன் கடிதம் எழுதப் பயப்படுகிறாய். நான் சொன்னபடி கடிதம் எழுதித் தரவில்லையானால் நீ தண்டனைக்குள்ளாவாய்'' என்று பயமுறுத்தினான். வேறு வழியின்றிப் பணக்காரனும் தனது மனைவிக்கு வைர வியாபாரியின் பெட்டியைக் கொடுத்தனுப்புமாறு கடிதம் எழுதிக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்ட வைரவியாபாரி நேராகப் பணக்காரனின் வீட்டிற்குச் சென்றான். கடிதத்தைக் கண்ட பணக்காரனின் மனைவி உண்மையிலேயே பெட்டியைக் கொடுத்தனுப்புமாறு கூறியிருக்கிறார் தனது கணவர் என்று நினைத்து உள்ளிருந்த வியாபாரியின் பெட்டியைக் கொணர்ந்து வைர வியாபாரியிடம் கொடுத்தாள். அதைச் சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்ட வைர வியாபாரி அதை அரசனிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

இதைப் பார்த்த அரசன், ''இப்பொழுது என்ன சொல்கிறாய்? உன் வீட்டில் பெட்டி இல்லையென்றாயே! இப்பொழுது எப்படி வந்தது? ஒருவனை ஏமாற்றித் திருடுவது என்பது மிகவும் தவறானது'' என்று கூறினான். பணக்காரன் தனது திருட்டுச் செய்கையினால் வெட்கித் தலைகுனிந்தவாறு நின்றிருந்தான். அரசன் வியாபாரியிடம், ''உன் பொருள்கள் அனைத்தும் இருக்கின்றனவாவென்று பெட்டியைத் திறந்து பார்'' என்று கூறினான். வைர வியாபாரி தன்னிடமுள்ள சாவியால் பெட்டியைத் திறந்து பார்த்து எல்லாம் சரியாக இருக்கிறதென்று கூறினான். பிறகு அரசன் வைர வியாபாரியிடம் பெட்டியைக் கொடுத்து ''இனி மேல் ஜாக்கிரதையாக இரு'' என்று அறிவுரை கூறிப் பணக்காரனுக்கும் தண்டனையளித்தார்.

தபால் பெட்டி

● 1976-ஐச் 'சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாட யுனெஸ்கோ தீர்மானித்துள்ளதையொட்டி 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' ஒரு குழந்தைப் புத்தகவிவரத் தொகுப்பு' (*Bibliography of Children's Books*) வெளியிடத் திட்டமிட்டிருக்கிறது.

கல்கத்தா — ம. க. ஸரஸ்வதி

● கோகுலம் 15-2-76 தேதியிட்ட இதழ் 4வது பக்கத்தில் 'சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் 'ராஜாஜி' எனப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இது தவறு. 'மௌண்ட்பாட்டன் பிரபு' என்பதுதான் விடை. ராஜாஜி, சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாவார்.

திருவண்ணாமலை — எஸ். ஆர். வீரராகவன்

● ஜவந்தரைக் கோலாட்டம் மார்கழி மாதத்தில் நடப்பது என்று குறித்துள்ளது தவறு. இது ஐப்பசி மாதத்தில் பௌர்ணமிக்கு பத்து அல்லது பதினைந்து தினங்களுக்குமுன் தொடங்கிப் பௌர்ணமியுடன் முடியும் விழா. மதுரை மீனாட்சி கோயிலிலும் இந்த உற்சவம் நடைபெறுகிறது.

சேலம் — ஸுப்ரஹ்மண்யன்

● 15-2-76 இதழ் கோகுலத்தில் 'தெரியுமா' என்ற பகுதியில் 2189 ஆம் கேள்வியான 'அக்வேரியம்' எனப்படும் காட்சி சாலைக்குப் போனால் நீங்கள் எதைக் காண்பீர்கள் ?' என்பதற்குக் கூறியுள்ள பதிலில் 'கடல் ஜீவராசிகளான மீன்களை' என்று தரப்பட்டுள்ளது. ஆனால் பம்பாயில் உள்ள அக்வேரியத்தில் மீன்கள் மட்டுமல்லாமல் முதலைகள், ஆமைகள் ஆகிய மற்ற ஜீவராசிகளும் உள்ளனவே. அது எப்படி.

(தவறுதான். அக்வேரியத்தில் நீர் வாழ்வன எல்லாம் பார்க்கலாம்.)

பம்பாய் — அருணா

● 15—2—76 கோகுலத்தில் 'தெரியுமா?' பகுதியில் கடைசியாக உள்ள ''ஜாட்ரல் பாங்க் (*Godrell Bank*) என்ற வானிலை ஆராய்ச்சி நிலையம் லண்டனுக்கு வட மேற்கே சுமார் 170 மைல் தொலைவில் செஷையர் மாகாணத்தில் உள்ளது.

சென்னை — பி. சந்திரசேகர்

● கோகுலம் 29 - 2 - 76 இதழில் ''மந்திரக் கைக்குட்டை''யில் ''அடிமைப் பெண் எதிரே கடவுள் தோன்றினார்'' என்ற வாசகம் இருக்கிறது. ஆனால் படத்தில் கடவுளுக்குப் பதில் ஒரு பெண் சித்தரிக்கப் பட்டிருக்கிறது. தேவதை என்று கதையில் திருத்தியிருக்கலாமே!

செங்கோட்டை — வல்லம் – செல்வன்




மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*
பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே-
முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும்
நேரம்—சிட்டுப்போல பறக்க சிறகு
முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான
பருவத்திலே உங்கள் கண்மணிக்குக்
கட்டாயம் தேவை—இன்க்ரிமின்.பின்னர்
பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப்
புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம்
ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம்
தரும் வைட்டமின்களோடு,
உங்கள் மகனின் வளர்ச்சிக்கு
மிக மிக அத்தியாவசியமான அமினோ
அமிலம், லைஸின் யாவும்
நிறைந்தது இன்க்ரிமின்.
ஆஹா! என்ன வளர்ச்சி! உண்டு வளர்வான் கண்டு மகிழ்வீர்!
Incremin drops LYSINE-VITAMINS
TONIC APPETITE STIMULANT
இன்க்ரிமின்* டானிக் டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்— 14 வயது வரையில்
உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்—உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!
டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேடு மார்க்
Sista's-INC-364C-R/76 Tam



மாயமோதிரம்

வாண்டு மாமா

7

மன்மத வர்மரின் முன்னால் கந்தருவக் கன்னி புவனாவை அழைத்து வந்து நிறுத்தினான் விஜயன். அந்த அழகி தன் காதலி என்ற நினைவோ, அவள் தனக்காகவே, தன் நினைவாகவே, தன்னை எதிர்பார்த்தே அந்தக் குகையில் காத்திருந்தாள் என்பதையோ அவன் உணரவே இல்லை. அவன் நினைவுகள் நாகவர்மனின் மாயப் பாவத்தினால் விஷமாகிப் போயிருந்தன. மன்னரின் மனத்துக்குகந்த மகத்தானதோர் அழகியைத் தேடிக் கொடுத்து விட்டோம் என்ற மன நிறைவோடு அமுதாவின் நினைவாகவே இருந்தான் விஜயன்.

புவனாவின் எழில் உருவத்திலே மன்னர் மன்மதவர்மர் வசமிழந்துபோனார். இத்தனை அழகை அவர் இதுவரை கண்டதே இல்லை. 'இத்தனை வருஷங்கள் என் மனம் திருமணத்தில் நாட்டமில்லாதிருந்தது இந்த அற்புத அழகிக்காகத்தானோ?'' என்று மகிழ்ந்து போனார். பேச்சற்ற நிலையில் பதுமையாக நின்றிருந்த மன்னரை உசுப்பினான் நாகன். ''அரசே தங்களுக்கு மணமாலை சூடிக் குபேரபுரியின் அரியணையில் தங்கள் அருகே அமருவதற்கு வந்திருக்கிறாள், அழகி ஒருத்தி. நாட்டின் வருங்கால ராணியை வரவேற்க வேண்டாமா?''

கனவுலகிலிருந்து உருட்டி விடப்பட்டவராக உடலைச் சிலிர்த்துக்கொண்டு தன் நினைவு பெற்றார் மன்மதர். ''ஆமாம். வரவேற்கத்தான் வேண்டும். சாதாரண வரவேற்பல்ல. மகத்தான வரவேற்பளிப்போம். நாகா! நமக்கு முன்னால் தூதுவனைக் குபேரபுரிக்கு அனுப்பிக் கோலாகலமான வரவேற்புக்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்'' என்றார் மன்மத வர்மர், புவனாவின் மீது பதித்த விழிகளை நகர்த்தாமலேயே. ''பெண்ணே! குபேரபுரியின் பட்டத்து ராணியாக உனக்குச் சம்மதம்தானே?'' என்றும் கேட்டார் அவளை.

விஜயனின் விபரீத நடத்தையால் புவனாவின் நெஞ்செல்லாம் நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தது. நில உலகின் மீது நாட்டம் கொண்டு பராக்கிரமருடன் வந்திருக்காவிடில், மானிடனை மணாளனாக அடைய வேண்டும் என்று நினைக்காதிருந்தால், விஜயன் என்ற வீரனிடம் சிந்தையைப் பறிகொடுக்காதிருப்பாளானால், காந்தர்வக் கன்னிக்குரிய அமானுஷ்யமான சக்தியைப் பயன்படுத்தித் தன் முன்னுள்ள அத்தனை பேரையும் எரித்து விட்டிருப்பாள். ஆனால், இப்போதோ அத்தகைய சக்தி இழந்த நிலையில், சாதாரண அபலைப் பெண்ணாக ஆத்திரப்படுவதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாது அவளால். ஆனாலும் விதியை மதியால் வெல்லலாம் என்ற மனோ திடத்துடன், ''அரசே! தங்களுக்கு மாலையிட்டு மகாராணியாவதற்கு விருப்பம்தான். ஆனால் ஒரு நிபந்தனை. இப்படியொரு அதிர்ஷ்ட வாழ்வை எனக்கு அளித்த என் குலதெய்வத்தை மகிழ்விக்க ஒரு மண்டலம் விரதம் இருந்து, நோன்பு நோற்று, காணிக்கை செலுத்திய பிறகே என் கல்யாணம் நடைபெற வேண்டும். இதற்கு நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்றாள் புவனா.

புவனாவின் நிபந்தனையைக் கேட்டு, நாகவர்மன் முகம் சுளித்தான். அதில் ஏதாவது சூதிருக்குமோ என்று. சூழ்ச்சிக்காரனாயிற்றே அவன்? ஆனால் மன்னரும் மற்றையோரும் மகிழ்ச்சியோடு புவனாவின் கோரிக்கைக்கு இணங்கினார்கள். எல்லோரும் புவனாவுடன் குபேரபுரி நோக்கிக் கிளம்பினார்கள். அவர்களுக்கு முன்னால் தூதுவன் குதிரையிலே விரைந்தான் குபேரபுரியை நோக்கி - வருங்கால மகாராணிக்கு வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காக.

காதலன் கைவிட்ட அதிர்ச்சியிலே ஆரம்பத்தில் புவனா ஆத்திரமடைந்தாலும், விவேகமுடையவளாதலால், விஜயனின் இந்த நிலைக்கு ஏதோ கார

ணம் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். திடசித்தம் கொண்ட ஒரு வீரன் இப்படித் திடீரென்று மாறவேண்டுமானால், இதில் ஏதோ சூதிருக்கிறது என்ற உறுதி ஏற்பட்டது. அதன் உண்மையை அறிந்து கொள்ளவே ஒரு மண்டலம் உபவாசம் இருக்க வேண்டும் என்று கூறினாள். நாற்பத்தைந்து நாட்களுக்குள் விஜயனுடைய மனமாற்றத்தின் உண்மையை அறிந்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையும் இருந்தது. அவளுக்கு.

குபேரபுரியின் வருங்கால மகாராணியான புவனாவுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. நகர மக்கள் மகாராணியின் அழகிலே சொக்கிப் போனார்கள். விருந்தும், விழாவும் கேளிக்கையும், குதூகலமுமாக அரண்மனை ஆனந்தத்தில் மிதந்துகொண்டிருந்தது. புவனாவின் எண்ணமெல்லாம், பார்வையெல்லாம் விஜயனைத் தொடர்ந்து கொண்டே இருந்தன. ஆனால் அவனோ ஏதுமே நிகழாதது போலப் புவனாவின் பக்கமே திரும்பாதவனாக, அமுதாவுடனே அளவளாவிக் கொண்டிருந்தான். இதைக் காணக் காணக் காந்தருவக் கன்னியின் கண்கள் கலங்கின. நெஞ்சம் ரணமாகியது.

அன்றிரவு அரண்மனையிலே ஒரு பெரிய விருந்து. குறுநில மன்னர்களுக்கும், நிலக்கிழார்களுக்கும், தம் வருங்கால மனைவியை அறிமுகப்படுத்தி வைப்பதற்காக ஏற்பாடு செய்திருந்தார் மன்னர். அடுத்து வரப்போகும் திருமண வைபவத்துக்குமாகச் சேர்த்து அப்போதிருந்தே முகாமிட்டிருந்தனர் பல சிற்றரசர்கள். விருந்து மண்டபத்திலே நடுநாயகமாகப் புவனா அமர்ந்திருந்தாள். அவள் பார்வையில் படும்படியாகவே விஜயனும் அமுதாவும் இருந்தார்கள். மன்னர் மன்மத வர்மர் சிற்றரசர்களுடன் சற்றுத் தூரத்தில் ஏதோ சுவையாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது புவனா தன் காதருகே யாரோ மெதுவாகப் பேசுவதை உணர்ந்தாள். சற்றே தலையைத் திருப்பித் தன்னிடம் பேச விரும்பும் அந்த மனிதனைப் பார்த்தாள். அது நாக வர்மன். புவனாவுக்கு வியப்பாக இருந்தது. 'இவன் எதற்காக என்னிடம் பேச விரும்புகிறான்?'. என்ற ஐயம் எழுந்தாலும், அவன் சொல்வதைக் கேட்பவள் போல அமைதி காட்டினாள்.

தாழ்ந்த குரலில் நாகன் கெகிகத்தான். ''விஜயன் தங்களுக்கு இப்படியொரு அநீதி இழைத்திருக்க வேண்டாம். நினைக்க நினைக்க என்னால் தாங்கவே முடியவில்லை''. நாடகமாடினான் நாகன். ''உயிருக்குயிராக நேசித்த ஒருவனை இன்னொருவரின் மனைவியாக்கி வைக்க அவனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?''



புவனாவின் உடல் சிலிர்த்தது. 'இந்த உண்மை இவனுக்கு எப்படித் தெரிந்தது? அதுவும் மன்னரின் தம்பி முறையாயிற்றே இவன்? ஒருவேளை விஜயனே கூறியிருப்பானோ? 'சிந்தனை சிறியது புவனாவின் நெஞ்சிலே. முதல் சந்திப்பிலேயே நாகவர்மனை அவளுக்குப் பிடிக்கவில்லை. அந்தப் பார்வை, சிரிப்பு, குழைவு, கும்பிடு எல்லாமே' இவன் ஒரு வஞ்சகன், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இவனிடம்' என்ற எண்ணத்தை உருவாக்கியிருந்தன புவனாவிடம். இப்போது, அவனாகவே வந்து பேசியபோது உஷாரானாள்.

''என்னை விஜயன் நேசித்தான் என்று தங்களுக்கு யார் கூறினார்கள்?'' அதே மெதுவான குரலிலேயே புவனாவும் பேசினாள்.

''மகாராணி! தங்கள் மனம் எவ்வளவு தூரம் இடிந்து போயிருக்கிறது என்பதை நான் அறிவேன். எனக்கு எல்லாம் தெரியும். உங்களுக்குத் துரோகம் இழைத்த அந்தக் கயவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படையுங்கள். நான் கவனித்துக்கொள்கிறேன்.

தான் கேட்டதற்கு நேரடியாகப் பதில் தராமல் விஜயனைத் தண்டிக்க அனுமதி கேட்டு, அந்த உரிமையையும் தானே வழங்கிக் கொண்டு பேசும் நாகனுக்கு



பதில் கூறாமல் அவனையே மேலும் பேச அனுமதித்து மௌனமாக இருந்தான் புவனா.

புவனாவின் மௌனத்தை அவள் ஒப்புதலாக எடுத்துக் கொண்டு பேசினான் நாகவர்மன். ''நாளைக்கு மன்னரும் மற்றவர்களும் வேட்டையாடப் போகிறார்கள், தெரியுமல்லவா? அதிலே உங்களைக் கைவிட்ட அந்த விஜயனும் இருக்கிறான். தாங்கள் வஞ்சம் தீர்த்துக் கொள்ள இதை விட வாய்ப்பான சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. எனக்கு அனுமதி அளியுங்கள், வேட்டைக்குச் செல்லும் விஜயன் வீடு திரும்பாதபடி செய்துவிடுகிறேன்.''

வியப்பாக இருந்தது புவனாவுக்கு, இவன் இவ்வளவு கொடியவனா என்று. விதி என்றுதான் கூறவேண்டும். இல்லாவிட்டால் யாரை முதல் பார்வையிலேயே வெறுத்தாளோ, யாருடைய பேச்சுக்களைச் சந்தேகத்துடன் எடை போட்டாளோ, அவனிடமே 'உங்கள் விருப்பப்படியே முடியுங்கள்' என்று கூறுவாளா? கூறினாள் — புவனாவே கூறினாள் அப்படி! விஜயனின் வாழ்வை முடிக்க விதி அவள் வாய் வழியே வழி வகுத்துக் கொடுத்து விட்டது. தான் கூறியதன் விபரீதத்தை அறியாமலே அவள் வாய் அதைக் கூறியது. சதிகாரன் நாகன் மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதந்தவனாக வேகமாக நகர்ந்தான். அவன் போன பிறகுதான் புவனா 'இவனிடம் போய் அப்படிக் கூறினேமே!' என்று துணுக்குற்றாள். அதை மாற்ற, தடுக்க, அவனை அழைக்க முயன்றபோது அவன், அவள் பார்வையிலிருந்து மறைந்தே போனான். 'போனால் போகட்டும். நாளைக்கு வேட்டையாடப் போகும்போது என்னையும்தானே உடன் அழைத்திருக்கிறார் மன்னர். விபரீதம் ஏதும் நிகழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளலாம்' என்று மெத்தனமாக இருந்துவிட்டாள் புவனா.

மறுநாள் வேட்டையாடுவதற்காகச் சிற்றரசர்கள் பலர், தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் கிளம்பினார்கள். மன்னர் மன்மத வர்மரும் நாகவர்மன், விஜயன் மற்றும் வேட்டைக்காரர்கள், வீரர்களுடன் கிளம்பினார். புவனா இந்த வீர விளையாட்டை வேடிக்கை பார்ப்பதற்காக ஒரு வெண்புரவி மீது உடன் சென்றாள். காட்டினுள் புகும்போது அவரவரும் தனித் தனியே பிரிந்து சென்று தங்கள் தங்கள் வீரத்தையும் திறமையையும் காட்டி விருப்பமான மிருகங்களை வேட்டையாடலாம். பிறகு அவரவரும் கொன்ற மிருகங்களோடு, மாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடவேண்டும் என்று திட்டம் வகுத்தான் நாகவர்மன். அதன்படி அந்த அடர்ந்த கானகத்தினுள் எல்லோரும் சிதறிப் பிரிந்தார்கள். வசதியானதோர் இடத்தில் பல கூடாரங்கள் அமைக்கப்பட்டன. வேட்டையாடிக் களைத்து வருபவர்களுக்கு உணவும் பானமும் களைப்பாறத் தக்க வசதிகளும் அந்தக் கூடாரங்களில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புவனா அந்தக் கூடாரங்களிலொன்றில் தங்கினாள்.

விரைவிலேயே விஜயனின் நீலவேணிக் குதிரை மற்றவர்களிடமிருந்து அவனை வெகு தூரம் பிரித்துக்கொண்டு போய்விட்டது. ஒரு கொழுத்த புலியைத் துரத்திச் சென்றான் விஜயன். அவனை வெகுதூரம் இழுத்துச் சென்ற அப்புலி கடைசியில் எங்கோ மறைந்தும் விட்டது. அதனால் அலுப்பும் வெறுப்பும் கொண்ட விஜயன் கானகத்திலே வழி தவறி இங்கும் அங்கும் அலைந்து களைத்துப் போனான். அப்போது அவன்



ஸ்வர்ண நதிக் கரையின் கரையோரமாகப் போய்க் கொண்டிருந்தான். தாகம் தணியத் தண்ணீர் குடிக்க எண்ணிக் குதிரையிலிருந்து இறங்கி நீரோட்டத்தின் அருகே சென்றான். அப்போது காற்றிலே இனிய கீதம் மிதந்து வந்தது. உள்ளத்தைக் கண்டி இழுக்கும் அந்த அற்புதமான இசை எங்கிருந்து வருகிறது, யார் பாடுகிறார்கள் என்று சுற்று முற்றும் பார்வையை வீசினான். ஸ்வர்ண நதியின் ஆழமான மடுவின் மருங்கிலே மூன்று அழகிகள் நீரிலே துளைந்தும், அளைந்தும் நீந்தியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் சிரிப்பொலிதான் அப்படிச் சங்கீதமாக ஒலித்திருக்க வேண்டும். பிரமித்துப் போய், தாகத்தையும் மறந்து நின்றான் விஜயன். தங்களையே இமைக்காத விழிகளால் விழுங்கிக் கொண்டு நிற்கும் விஜயனைக் கண்ட நதிக் கன்னிகள் ''நாங்கள் இந்த ஸ்வர்ண நதியின் காவல் கன்னியர். உன் விரலில் மின்னிக் கொண்டிருக்கிறதே ஒரு மோதிரம், அது எங்கள் உடைமையான மாயத் தங்கத்திலிருந்து உருவாக்கியது. அந்த மோதிரத்தைத் தயவு செய்து எங்களிடம் கொடுத்து விடுங்கள்'' என்று கூறினாள் ஒரு மீனழகி.

ஆனால் விஜயன் அதைக் கொடுக்கவில்லை. நதிக் கன்னிகளில் ஒருத்தி விஜயன் அருகாக நீந்தி வந்து கூறினாள், ''அந்தத் தங்கத்துக்கு ஒரு சாபம் உண்டு. அதை யார் தனதாக்கிக் கொண்டாலும் அவர்களை அது வாழ விடாது. உன் நன்மைக்காகத்தான் கூறுகிறோம். அந்த மாயத் தங்கத்தின் மந்திர மோதிரத்தை நீ வைத்துக்கொண்டிருந்தால் உனக்குத் துன்பமே தொடரும்.''

இந்த எச்சரிக்கையை விஜயன் லட்சியமே செய்யவில்லை. பலமாகச் சிரித்தபடியே நான்கு கை நீரை அள்ளிப் பருகிவிட்டுப் போனான். ஆனால், ஸ்வர்ண நதியின் காவல் கன்னிகளின் அந்த எச்சரிக்கை அத்தனை விரைவில் உண்மையாகுமென்று அவன் நினைக்கவில்லை. சற்றுத் தொலைவில் அதே நதிக் கரையில் அடர்ந்து வளர்ந்திருந்த கானகத்து மரங்களின் கருமை சூழ்ந்த நிழலில் காலன் நாகனின் உருவிலே காத்திருக்கிறான் என்பதை அறியாமலே விஜயன் நீலவேணியைக் கையில் பிடித்தபடி நிதானமாக நடந்து கொண்டிருந்தான். நதிக் கன்னிகளின் இசை இப்போது ஊ...ஊ என்று ஊழிக்காற்றின் ஓலமாக ஒலிக்கலாயிற்று.

ஒளிந்திருக்கும் அபாயத்தை அறியாமலே அதைக் கடந்து நடந்தான் விஜயன். தான் வீசும் வேல் வேகமுடன் தாக்கி வீழ்த்தும் சரியான தூரத்திலே விஜயன் தன்னைத் தாண்டிப் போகும் வரை காத்திருந்தான் நாகன். அவன் வலக்கை ஈட்டியின் உடலை இறுக்கலாயிற்று. அடுத்த விநாடி நாகனின் கரம் உயர்ந்தது. காற்றைக் கிழித்துக் கொண்டு வெகு வேகமாக அவன் பிடியிலிருந்து விடுபட்டுப் பறந்தது ஈட்டி. நாகவர்மன் ஈட்டி எறிவதிலே வல்லவன். அவன் குறி இதுவரை தவறியதே கிடையாது.

(அடுத்த இதழில் முடியும்)

தெரியுமா?



2227. ஆர்மோனியம் முதலில் எந்த நாட்டில் உபயோகிக்கப்பட்டது?

2228. அஜந்தா குகைக் கோயில்கள் ஒரேகாலத்தில்உருவாக்கப்பட்டவையா? வெவ்வேறு கால கட்டங்களிலா?

2229. தலாய்லாமா, பஞ்சன்லாமா என்ற திபேத்தியத் தலைவர்களில் யார் அரசியல் சார்புள்ள தலைவர், யார் மதச் சார்புள்ளவர்?

2230. காக்கைகளில் கூடு கட்டுவது ஆண் காக்கையா, பெண் காக்கையா?

2231. கட்டபொம்மனின் தம்பி ஊமைத் துரையின் இயற் பெயர்என்ன?

2232. அம்மானை விளையாட எத்தனை காய்கள் தேவை?

2233. ஆந்தைக்கும் கூகைக்கும் என்ன வேறுபாடு?

2234. ஜாம்பியாவில் வழங்கும் கரன்சியின் பெயர் என்ன?

2235. குழந்தையே மனிதனின் தந்தை என்று கூறியவர் யார்?

2236. சந்திரனில் மலைகள் இருப்பதை முதலில் கண்டவர் யார்?

2237. ஜிப்சத்தின் ரசாயனப் பெயர் என்ன?

2238. தாமஸ்கோப்பை எந்த விளையாட்டுக்கு வழங்கப்படுகிறது?

2239. கிறிஸ்டோபர் கொலம்பஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

2240. லண்டனுக்குமுன் இங்கிலாந்தின் தலைநகரமாக இருந்த நகரம் எது?

2241. சூரத் நகரம் எந்த நதியின் கரையில் அமைந்துள்ளது?

2242. யுகோஸ்லேவியாவில் வழங்கும் நாணயத்தின் பெயர் என்ன?

2243. லக்னௌ நகரம் எந்த நதியின் அருகில் உள்ளது?

2244. தவளையின் இதயத்தில் எத்தனை அறைகள் இருக்கும் தெரியுமா?

2245. கிரிக்கெட் ஸ்டம்பின் உயரம் எவ்வளவு?

2246. சீனா ஐ.நா. சபையில் அங்கம் பெற்றது எந்த ஆண்டில் தெரியுமா?

2247. உத்கல் ராஜ்யத்தின் தற்போதையப் பெயர் என்ன?

2248. புகாரெஸ்டைத் தலைநகராகக் கொண்ட நாடு எது?

2249. உலகக் குத்துச் சண்டை வரலாற்றில் நீண்டகாலம் ஹெவி வெய்ட் வீரராக இருந்தவர் யார்? எவ்வளவு வருடங்கள்?

2250. "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!" என்று வாழ்த்துகிறார்களே அந்தப் பதினாறு பேறுகள் என்னென்னவென்று தெரியுமா?

2251. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. அந்தப் பத்து எது?

தெரியுமே!



விடை: 2227. ஃப்ரான்ஸ் நாட்டில். 2228. கி.பி. முதல் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை வெவ்வேறு மன்னர்களால் உருவாக்கப்பட்டது. 2229. தலாய் லாமா மதத் தலைவர். பஞ்சன் லாமா அரசியல் தலைவர். 2230. பெண் காக்கைதான் கூடு கட்டும். 2231. செவத்தையா குமாரசுவாமி. 2232. மூன்று காய்கள். 2233. ஆந்தை மைனா அளவு இருக்கும்; தலை மொட்டை. கூகை பருந்தளவு இருக்கும்; காதுகள் கொம்பு போல் உயர்ந்திருக்கும். முகத்தில் இரண்டிக்கும் வித்தியாசமில்லை. 2234. க்வாச்சா (Kwacha) 2235. வில்லியம் வேர்ட்ஸ் வொர்த். 2236. கலிலியோ. 2237. கால்சியம் ஸல்பேட். 2238. பாட்மிண்டனுக்கு. 2239. இத்தாலி நாட்டை. 2240. வின்செஸ்டர். 2241, தப்தி நதிக் கரையில், 2242. டினார் (Dinar). 2243. கோமதி நதிக் கரையில். 2244. மூன்று அறைகள். 2245. அங்குலத்தில் 28 சென்டி மீட்டரில் 71.12 2246. அக்டோபர் 26, 1971ல். 2247. ஒரிஸ்ஸா. 2248. ருமேனியா. 2249. ஜோ லூயி 1937லிருந்து 1949 வரை. 2250 பெருவாழ்வளிக்கும் பதினாறு — புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்விதி, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளிமை, துணிவு, நோயின்மை, நீண்ட ஆயுள். 2251. மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காதல்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.


வாழ்க்கையில் சமமாக வளம் பெறும் ஆடவர் இவர்...
...அதற்குத் துணை செய்ய அழகான ஆடைகளையும் அணிகிறார்!
MAFATLAL GROUP
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!

-M.461 TM

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly
மலேசியாவில் (விமானப் பதிப்பு) 50 மலேயா காசு

